# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ மே ௴ 29௳ [ந. 148

பிரஸங்கம் CXLVIII.

## மிஸ்ட்டர் சர்ச்சிலின் யுத்த விமர்சனம்.

(அமெரிக்கக் காங்கிரஸ் சபைகளின் கூட்டம் ஒன்றில் வாஷிங்டனில் பிரசங்கம்).

மே ௴ 19.

நேசநாடுகளும், பிரிடனும், அமெரிக்காவும் மிகவும் கஷ்டப்பட்டு தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் எதிரியுடனும் போர் புரிந்தன. இதற்கு முன்பு ஜப்பானின் துரோகத்தைக் கண்டு அமெரிக்கா அதிகச் சீற்றம் கொண்டிருந்த சமயத்தில் காங்கிரஸ் கூட்டத்தில் நான் பேசினேன்.

1940-ம் வருஷம் மே ௴ முதல் 1942-ம் வருஷம் டிஸம்பர் மாதம் வரையில் நாங்கள் தனிமையில் போர் புரிந்து கொண்டிருந்தோம். உலகின் எதிர் காலத்திற்கும் அமைதிக்கும் நம் இரு நாட்டாரின் சேர்க்கைதான் உதவ முடியும் என்பதை நாம் அனுபவபூர்வமாக அறிந்திருக்கிறோம். பஸிபிக் பிரதேசத்திலும், மற்றும் இதர இடங்களிலும் நமக்கு அதிகக் கெடுதல்கள் ஏற்பட்டபோதிலும், நமது முயற்சி முடிவில் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. பிரிடிஷ் சரித்திரத்திலேயே இதுவரை கேட்டிருத ராணுவ நஷ்டம் நமக்கு ஏற்பட்டது.

இதை நிவர்த்திக்கவேண்டும். தவிரவும் இதற்குப்பதிலும் செய்தாகவேண்டும்.

ஜப்பானுடன் யுத்தம் நடத்துவதில் அமெரிக்கரைவிட எங்களுக்குச் சிரத்தைக் குறைவு இருப்பதாக எவரும் நினைக்கக்கூடாது. நம் தேகத்தில் திடம் இருக்கும் வரையில் நம் திட்டப் பிரகாரம் நாங்களும் உங்களுடன் சேர்ந்தே சண்டை போடுவோம்.

ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில் இந்தியாவின் கீழ்திசையில் கிரேட் பிரிடன் குவித்து வைத்திருக்கும் தரைப்படைகள், விமானப்படைகள், கடற்படைகள் யாவும் முன் நின்று வெற்றிக்கு வழி காட்டவேண்டும். நெடுநாளாக அவதியுறும் சைனாவுக்கும் இந்தப் பகுதியில் தான் உதவிபுரியவேண்டும்.

### சைனாவுக்கு உதவி.

சைனாவுக்குத் தாமதமின்றி உதவுவதே நமது திட்டத்தின் முக்கிய அம்சமாகும். பீல்ட் மார்ஷல் வேவலும் மற்றும் இதர படைத்தலைவர்களும் இந்தியாவிலிருந்து இங்கு வந்து இருக்கின்றனர். அவர்கள் வாஷிங்டனைப் பார்வையிடுவதற்றாக ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து வரவில்லை. எல்லோரும் கூடிப்பேசி, காரியத்தை நடத்தவேண்டும்.

கீழ்த்திசையில் கிளம்பி, சைனா ரஸ்தாவைத் திறந்து விடும்படி இந்தியப்படைக்கு உத்தரவிட்டால் போதும் என்று நீங்கள் நம்பக்கூடும். ஆனால் விஷயம் அவ்வளவு சுலபமானதல்ல. இந்தியாவுக்கு வடகிழக்கே மலைகளும், காடுகளும் இருப்பதால் காரியம் எளிதானதல்ல.

# ஜெர்மனி பேரில் விமான நடவடிக்கை.

## கடுமையாகத் தாக்கும் திட்டம்.

பிரிடிஷ் தீவுகளிலிருந்துகொண்டு ஜெர்மனியை நமது வெடிவிமானங்கள் தாக்கியிருக்கின்றன. இதில் அமெரிக்கரும் அதிக உதவி புரிந்திருக்கிறார்கள். இந்தச் சண்டையில் எண்ணிக்கைதான் முக்கியம். இந்த விமான யுத்தத்தினால் எல்லா நாடுகளையும் அடக்கி, ஒடுக்கி விடலாமென்று ஜெர்மனியும், ஜப்பானும் எதிர் பார்த்தது. இத்தகைய விமான யுத்தத்தில் தங்களுக்கு மேலானபலம் இருக்கிறதென்று இப்பொழுது நேசதேசங்கள் எடுத்துக்காட்டி வருகின்றன. எவ்வளவுக்கவ்வளவு விமான நடவடிக்கை கடுமையாகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நன்மை. நாம் எதிரியைவிட நஷ்டத்தை விரைவில் பரிகாரம் பண்ண முடியும். ஆகிலும் நம்முடைய அபிவிருத்தி சாவதானமாகவும் நிச்சயமாகவும், நடைபெறும். விமானக் கூடங்களையும், விமானப்படையின் மேன்மைக்கு அவசியமான தரைப்படைகளைச் சலனம் செய்யும் வேலையையும் ஏற்படுத்துவதற்குத்தான் தீவிர முயற்சி செய்தாலும் காலதாமதம் ஆகும்.

விமான பலத்தைக்கொண்டே ஜெர்மனியையும், இதாலியையும் ஒடுக்கமுடியுமா என்று கேட்பவர்களுக்கு விமானத் தாக்குதல் காரணமாக எதிரிகளுக்கு அதிகச்சேதம் ஏற்பட்டு வருகிறது என்பதை ஒருமனதாக நாம் பதில் சொல்லமுடியும். ஜெர்மன் தொழில் பிரதேசங்களும், ரூரும் இதுவரை இராதபடி நாசமாக்கப்பட்டு வருகின்றன. ஜெர்மனியில் கால்வாய்களுக்கு ஜலமும் எதிரியின் ஆயுத சாலைகளுக்கு மின்சார சக்தியும் அளித்த இரண்டு பெரிய அணைகள் உடைக்கப்பட்டு அதனால் நேர்ந்த சேதத்தைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஜெர்மனியிலும், இதாலியிலும் அல்லது ஆக்கிரமிப்பு நாடுகளிலும் ஜெர்மனி யுத்த சாதனங்களைப் பெருக்குவதை இயன்றளவுக்குத் தடை பண்ணுவதே நமது திட்டம். இவற்றிற்கான நிலயங்கள் தாக்கப்பட்டு எல்லாம் நாசமாக்கப்படும்.

## ஜெர்மனிக்கு புத்தியுரை.

இந்த விமான நடவடிக்கை மேலும் அதிகரிக்கும். இப்போது அது அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஜெர்மன் மக்கள் தாங்கள் இத்தனை காலமாக வளர்த்து வந்த மகத்தான கொடுங்கோன்மையை நிவர்த்திக்கும்வரை இந்த நடவடிக்கை நின்று விடாது. இது தவிர நமது விமானத்தாக்குதல் காரணமாக இதர இடங்களிலிருந்த ஜெர்மன் விமானங்களும் தாய்நாட்டிற்குத் திரும்புகின்றனர். நூற்றுக்கணக்கான சண்டை விமானங்களும், ஆயிரக்கணக்கான விமான எதிர்ப்பு பீரங்கிகளும், லக்ஷக்கணக்கான மனிதர்களும் ஏராளமான தொழிற்சாலை உற்பத்திகளும் தற்காப்பு ஏற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

வெற்றி பெறுவதற்கு இந்த விமான யுத்தம் மிகவும் முக்கியமாகும். கூடிய சீக்கிரத்தில் இரு நாட்டாரும் ஜப்பானிய ராணுவ நிலயங்களையும் கடுமையாக விமானமூலம் தாக்க வேண்டுமென்றும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

சில அமெரிக்க விமானிகளுக்கு ஜப்பானியர் மரண தண்டனை விதித்ததைப்போன்ற காட்டுமிராண்டித்தனம் இருக்க முடியாது. அதனால் இந்த விமானத் தாக்குதல்பற்றி அவர்களுக்குள்ள மனோநிலையும் புலனாகிறது. ஆகவே எதையும் பொருட்படுத்தாமல் ஜப்பானிய வெடிமருந்துத் தொழிற்சாலைகளைத் தாக்குவதே யுத்தத்தை நடத்துபவர்களது முக்கிய கடமையாகும். சமாதானம் வரும்முன்பு இது நடக்கவேண்டும்.

யுத்தத்தை நடத்திவரும் எல்லா தேசங்களும் கூடிய சீக்கிரத்தில் ராணுவ, பூகோள ராஜீய சிரமங்களைப் பொருட்படுத்தாது, ஜப்பானுடைய ஆயுத உற்பத்திசாலையை நாசம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். உலகத்தில் சமாதானம் நிலுவவேண்டுமானால் அவைகளை அழித்துத்தான் ஆகவேண்டும்.

## நேசதேசத் துருப்புகளைச் சலனம் செய்வது உலக யுத்த தந்திரம்.

வெறும் படைகளைத் திரட்டுவதிலோ அல்லது விமானங்களைப் பெருக்குவதிலோ மட்டுமே நேசதேசப் பிரச்னை இருக்கவில்லை. இந்தப் படைகள் எதிரியை எதிர்த்துத் தாக்குவதே முக்கியமாகும். எதிர்ப்பைத் தாண்டி ஸப்மரீன் அபாயத்திலிருந்தும் தப்பித்துக்கொண்டு மலைகளையும் காடுகளையும் கடந்து உலகின்பல பாகங்களுக்கும் போய்ச்சேருவதுதான் கவனத்திற்குரியதாகும்.

எதிரியுடன் சீக்கிரத்தில் சண்டை போடுவதிலேயே நமது நாட்டம் இருக்கவேண்டும். நமது பெரும் படைகளை உபயோகிப்பது, எதிரியை நமக்கு அனுகூலமான விதத்தில் தாக்குவது பல போர்முனைகளையும் சரிவரக் கவனிப்பது, இவைதான் நாம் தீரஆலோசித்து முடிவு பண்ண வேண்டிய விஷயங்கள். இதற்கு ஒருமித்த நோக்கம் தேவையாகும்.

யுத்தப்போக்கு திருப்திகரமாகிவருவதாகவும் குறிப்பிட்டார். தமது ஸர்க்காருடைய ஆதரவுடனும், பெரிய அதிகாரிகளுடனும் தாம் ஜனாதிபதியுடன் கூடிப்பேசுவதே கடமை யெனக்கருதி அங்கு வந்திருப்பதாயும் அவர் கூறினார்.

"கூடிய சீக்கிரத்திலேயே நாம் மார்ஷல் ஸ்டாலினுடனும், சாத்தியமானால் சியாங்கே ஷேக்குடனும் கலந்து பேசுவதை எதிர்பார்க்கிறோம். ஆனால் அது எப்போது என்றோ எங்கு என்றால் கூற இயலாது. எனக்கே நிச்சயம் இல்லை. அப்படித் தெரிந்தாலும் நான் அதை வெளியிடமாட்டேன். இதற் கிடையில் நம் இரு நாட்டு அதிகாரிகளுக்கிடையே அதிக தொடர்பு இருந்துவரும்; பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் பல பாகங்களுக்கிடையேயும் ஒற்றுமையையும் அந்நியோந்நியத்தையும் வளர்ப்பதே என் முயற்சி".

## யூ படகுகளை எதிர்க்கும் யுத்தம்.

### கடற்படை நிலைமை திருப்திகரமாகவே யிருக்கிறது.

அமெரிக்கர்கள் பஸிபிக் போர்முனையில் அதிகக் கவனம் செலுத்தி வரும்பொழுது, அட்லாண்டிக் சமுத்திர யுத்தத்தை நாம் நடத்தி வந்தோம். நமக்குள் நட்பு ஏற்பட்ட பிற் பாடு அமெரிக்க நாடுகளுக்கு ஏற்பட்டதைவிட எங்களுக்கு இரண்டு மடங்குக்குமேலான கப்பல்கள் நஷ்டமாகியிருக்கின்றன.

ஆகிலும் அமெரிக்கக் கப்பல் கட்டும் நிலயங்களின் உற்பத்தியானது சென்ற ஆறு மாதங் களில் அதிகரித்திருக்கிறது. நேசநாடுகளுக்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டங்களைவிட மிகுதி யாகவே கப்பல்களைக் கட்டியிருக்கிறோம். யுத்தத்தை நடத்துவதற்குத் தேவையான கப் பல்களையும் மேன்மேலும் துரிதமாகக் கட்டி விடுவோமென்று நம்பலாம்.

நாம் அதிக எதிரி ஸப்மரீன்களை நாசமாக்கியிருக்கிறோம் என்பதை உங்களுடைய மந் திரியே ஆமோதிப்பார். சென்ற மூன்று மாதகாலமாக அதிலும் மூன்றுவார காலமாக ஸப்மரீன் நாசம் மிகவும் அதிகம். எதிரிகளின் யூ படகுகள் அதிகரித்து விட்டதும், நமது தாக்குதலும் இதற்குக் காரணமாகும். புதிய முறைகளும் மிகவும் உதவியிருக்கின்றன.

ஸப்மரீன் அபாயம் இன்னமும் இருக்கிறது. அதைக் கடைசிவரை எதிர்த்து அவற்றை முறியடிப்போம் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. மூழ்கடிக்கப்பட்டவற்றைக் காட்டிலும் அதிகம் உற்பத்தியாகி வருகிறது.

நமது கூட்டு யுத்த முயற்சியின் பயனாக யுத்த தளவாடங்களைக்கொண்டுபோக நஷ்டங் களுக்கு மேலான அதிக சாமான் கப்பல்களிலிருந்து வருகின்றன.

### நாம் முன்னேறித்தாக்க ஆரம்பித்து விட்டோம்.

ஒரு நாள் காலை டொப்ருக் சம்பவத்தைக் குறித்தும் அங்கு 25,000 பேர் சரண்புகுந் ததைப் பற்றியும் தம்மிடம் ஜனாதிபதி தெரிவித்ததாகவும் அப்போது நிலைமையைத்திருத்து வதற்கு வழி எது என்பதிலேயே அமெரிக்காவின் நாட்டம் இருந்ததாகவும், உடன் காலத்தி லேயே, பயிற்சிக்காக உபயோகப் பட்டுவந்த ஜெனரல் ஷெர்மானிடமுள்ள டாங்கிகளை வட ஆபிரிக்காவுக்கு, அவர் அனுப்பினார் என்றும் சொன்னார். முதல் அனுப்பப்பட்ட 150 டாங்கிகள் எதிரியின் யூ படகுகளுக்கு இரையாகின. அவைகளுக்குப் பதிலாக இன்னு அநேகம் டாங்கிகளை அனுப்பினார். எல் அலமீனில் அமெரிக்க டாங்கிகள் அதிக உதவி புரிந்ததாயும் வட ஆபிரிக்காவில் சமீபத்தில் கிடைத்த வெற்றியிலிருந்து பிரிடிஷ் அமெரிக்க ஒத்துழைப்பு அதிகம் சாதிக்க முடியும் என்பது தெரிவதாகவும், இதே மாதிரி ஒற்றுமையாக நடந்து கொண்டால் யுத்தத்தில் மட்டுமின்றி சமாதானம் ஏற்பட்ட பிறகும் பல பிரச்னைகளைச் சுலபமாகத் தீர்க்கலாம் என்றும் பேசினார்.

மறுபடியும் எதிர்த்துத் தாக்கும் சக்தியை நேசநாடுகள் பெற்றுவிட்டதாகவும் அந்த சக்தியை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டிருப்பதாயும் ஜெனரல் கிராட் தலைமையில் பிரெஞ்சுப் படைகளும் நேசதேச பக்கமே வந்திருப்பதாகவும் பல முக்கியமான யுத்த தளங் கள் தங்களிடம கிடைத்திருப்பதாகவும், இதாலி மிகவும் உக்கிரமாகத்தாக்கப்படும் என்றும்

அதனல் நேசதேசங்களுக்கே நன்மை கிட்டும் என்றும் மத்தியதரைக்கடலில் அடிக்கடி எதிரிக் கப்பல்கள் தாக்கப்படுவதாகவும் இதனல் மத்தியக் கிழக்கிலும் கீழ்த் திசையிலும் அனுகூலமான நிலைமை ஏற்பட்டதாகவும் சொன்னர். ஸ்டாலின்கிராட்டில் ருஷ்யர்கள் அடித்ததுபோல் எதிரியை நாமும் பலமாக அடித்து விட்டோமென்றும் தீரத்துடனும் பலமாகவும் சண்டைபோடும் நமது ருஷ்ய நண்பரின் பளுவைக்கொஞ்சம் குறைத்து விட்டோமென்றும் அவர் சொன்னர்.

கார்ப்பொரல் ஹிட்லர் பார்லிமெண்டரி ஜனநாயகங்கள் யுத்தத்தை நடத்த முடியாது என்று ஏளனமாகக்கூறியபோதிலும் இவ்வளவு காரியங்கள் நடந்திருப்பதாகவும், ஸ்டாலின் கிராட்டில் மார்ஷல் பாலஸை வீழ்த்திய சக்தியே டூனிஸியாவிலும் ஒரு பெரிய படையை நாசமாக்கியதாகவும் அவர் சொன்னர்.

### அச்சு நாடுகளின் நஷ்ட விவரம்.

இங்கு அச்சுப்படையில் 25 லக்ஷம் பேர்களும் ஏராளமான யுத்த தளவாடங்களும், எதிரிக்கு நஷ்டமாகி விட்டன. எதிரிக்கு படைபலக் குறைவுடன் மனேநிலையும் சீர்கெட்டு விட்டது. யுத்தத்துக்காகத் துருப்புகளைத் தயாரிப்பதும், அமெரிக்க, பிரிடிஷ் யுத்தப்படைகளை ஒன்று சேர்த்து நடத்துவதும் விசேஷமான லாபத்தை அளித்துவிட்டது. கால தாமதத்தினல் ஏற்பட்ட நஷ்டங்களைவிட நமக்கு அதிகலாபம் கிடைத்திருக்கிறது. ஆபிரிக்கா, யுத்தம் முடிவாகி விட்டது. முஸோலினி சாம்ராஜ்யம் மறைந்துவிட்டது. அபிஸீனியா சக்ரவர்த்தி மறுபடியும் தமது ராஜ்யத்தை ஸ்வீகரித்திருக்கிருர். டாகார் முதல் அலெக்ஸாண்டிரியா வரையிலும், கஸாபிளாங்கா முதல் கைரோ வரையிலும், மடகாஸ்கர் முதல் மொரக்கோ வரையிலும். பிரதேசம் பூராவும் பிரிடிஷ் அல்லது அமெரிக்க அல்லது பிரெஞ்சுப் பாதுகாப்பில் இருக்கிறது. கண்டம் பூராவும் பாஸிஸத்தையோ நாஸி முறையையோ பின்பற்றுபவர் ஒருவர்கூட தற்சமயம் கிடையாது. ஆபிரிக்கப் போர்காரணமாக சர்வாதிகாரிகள் 6,27,000 ஸோல்ஜர்களையும், 24,00,000 டன் எடையுள்ள கப்பல்களையும், 8,000 விமானங்களையும், 6,200 துப்பாக்கிகளையும், 2,550 டாங்கிகளையும், 70,000 லாரிகளையும் இழந்து விட்டனர். இன்னும் அநேக கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. அநேக விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

வட ஆபிரிக்கப் போரும் டூனிஸியா வெற்றியும் மூவகைப்பட்ட நாடுகள் ஒற்றுமையுடன் ஒரே தலைவர் கீழ் சிறப்புடன் சண்டை போட்டதையே நிரூபிக்கிறது. பிரிடிஷ் அமெரிக்க சிப்பந்திகளின் ஒன்றுபட்ட சேவை மிகவும் உயர்தரமானது. அதனல்தான் இரண்டாவது அமெரிக்கப்படையும் பிரிடிஷ் சேனையும் தெற்குப் பகுதியிலிருந்து வடக்குக் கரைக்கு 300 மைல்கள் முன்னேறி பிஸர்ட்டாவுக்குப்போகும் வழியில் உண்டான ஆபத்துகளை எல்லாம் நிவர்த்திக்க முடிந்தது.

இத்தகைய பலதரப்பட்ட படைகளை ஒன்று சேர்த்து திறமையாக நடந்து கொண்டவர் ஜெனரல் ஈஸன் ஹோவரைக் காட்டிலும் வேறு ஒருவர் இருக்கமுடியாது.

### ஹிட்லரும், ருஷ்யாவும்.

இன்னும் நாம் அதிகக் கஷ்டப்படவேண்டும். ஐரோப்பாவில் மட்டுமல்ல. பஸிபிக் பிரதேசத்திலும் இந்தியப் பிராந்தியத்திலும். நமக்குக் கஷ்டங்கள் இருக்கின்றன. ஜனதிபதியும் நானும் மற்றும் எங்களது சிப்பந்திகளும் கூடியவரை நம்மாலியன்றளவுக்குத் திட்டம் வகுத்து, தாமதமின்றி காரியத்தை நடத்தலாம் என்பதற்கே கூடிப்பேசி வருகிரும்.

தரைச்சண்டையில் அதிக பளுவை ருஷ்யர்களே தாங்கி வருகின்றனர் என்பதை நாம் ஒரு க்ஷணமும் மறக்கக்கூடாது. ருஷ்யாவில் 190 ஜெர்மன் வரிசைகள் மற்ற 28 இதரதேச டிவிஷன்களும் யுத்தம் புரிகின்றன. ஜெர்மன், ருஷ்யப் படைகளின் பலத்தைப் பரிசோதிக்க ஒரு பெரிய யுத்தமும் ஆரம்பிக்க இருக்கிறது. ருஷ்யாவினல் ஜெர்மனிக்கு ஏற்பட்ட நஷ்டம் விபரீதமாகவே முடியும் என நான் நம்புறேன்.

மறுபடியும் ஒரு வலுத்த தேசத்தைத் தாக்க ஹிட்லர் முயலுவதைத் சூதாட்டத்திற்கு ஒப்பாகவே கருதவேண்டும். ஏற்கெனவே இருமுறை தாக்கியும் பலன் ஏற்படவில்லை. அவருக்கு இனியும் வெற்றி கிடைக்காது.

இதற்கிடையில் நாமும் பலன் தரக்கூடிய விதத்தில் காரியங்களைச் செய்யவேண்டும். 1943-ல் ருஷ்ய பளுவைக் குறைக்க முயலவேண்டும். அது எப்போது எப்படி எனத் தற்சமயம் தெரிவிப்பது எளிதல்ல.

## ஐரோப்பாவில் கஷ்டம்.

### நேசநாடுகள் சீக்கிரம் வெற்றிபெறவேண்டும்.

ஜப்பானுக்கும், மற்றும் ஹிட்லர், முஸோலினி ஆகியோருக்கும் எதிராக நமக்கு ஏற்பட்ட அனுகூலமான நிலைமையை நாம் நழுவவிடக்கூடாது.

பல நாடுகள் நாசமாவதைத் தடுக்கவேண்டும். இதற்கு நாம் தியாகம் புரியவும் கஷ்டங்களை மேற்கொள்ளவும் தயாராகவேண்டும்.

நமது முயற்சி கொஞ்சமும் தணியக்கூடாது. எதிரி இன்னமும் வலிமைமிகுந்தவனாகவே இருக்கிறான். அவனைப் பிடிப்பது கஷ்டமாக இருக்கிறது. அவனது ராணுவம் மஹத்தானதாகவே இருக்கிறது. வசதிகளும் ஏராளம். அவன் வசம் முக்கியமான பிரதேசங்கள் இருக்கின்றன.

ஒரு தவறான மார்க்கமோ அல்லது பிசகான திட்டமோ அல்லது நேசதேசங்களிடையே அயர்வோ காணப்படுமாயின் அது நமது பொது எதிரிக்கு நம்மைத்தாக்குவதற்கு மேலும் அதிக பலத்தையே தரும். நாம் அதிக ஆபத்துகளைத் தாண்டி விட்டோம். மேலும் தாண்டவேண்டியவை பல இருக்கின்றன. அவற்றில் ஒன்று இந்த யுத்தம் அனாவசியமாக நீடிக்கப்படுவதாகும்.

எந்தப் புதிய உபத்திரவம் வேண்டுமானாலும் தலைகாட்டக்கூடும். புதிய அபாயங்களும் ஏற்படக்கூடும். ஜனநாயக நாடுகளுக்குச் சலிப்பு ஏற்படும்வரை ஏராளமான செலவில் இந்த யுத்தத்தை நீடித்து நடத்துவதே ஜெர்மனி ஜப்பான் ஆகிய நாடுகளின் ஆவல். இதைத் துளைக்கவே நாம் முற்படவேண்டும். நாம் இம்மாதிரிபல ஆசைகளைச் சிதறவடித்திருக்கிறோம். எந்த விரும்பத்தக்க விஷயமானாலும் சரி, எந்தநிலைமையானாலும் சரி, எந்த யோசனையானாலும் சரி, நாம் அவற்றை மிகுந்த ஜாக்கிரதையாகவே கவனிக்கவேண்டும். அவை நம்மை நமது யுத்த லக்ஷியத்திலிருந்து திருப்பிவிட முயலக்கூடும். திடமான புத்தியுடனும் தளராத உறுதியுடனும், நிச்சயமான நம்பிக்கையுடனும் நாம் இனியும் நடந்துகொள்ளவேண்டும்.

இவ்விதம்தான் நாம் உலகத்தின் எதிர் காலத்திற்கும் மானிட வர்க்கத்தின் கதிக்கும் நாம் நமது கடமையை நிறைவேற்ற முடியும் என்று பிரதம மந்திரி கூறி முடித்தார்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 22—5—43-லிருந்து 28—5—43-வரை.

**ஜெர்மனி.**—மேமீ 17-ம் தேதியன்று ஜெர்மனிக்கு மற்றொரு அவக்கேடு ஏற்பட்டது. பிரிடிஷ் பாம்பர் படை மோன், ஸார்ப், எடர் என்னும் அணைகளை உடைத்துவிட்டது. இந்த மூன்றும் சேர்ந்து ரூர் பிரதேசத்தின் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீர் வசதியை அளித்தது. ரொம்பவும் சிரம சாத்யமான இந்த முயற்சியில் விமானப் படைத் தலைவர் கிப்ஸன் தலைமையின் கீழுள்ள சிறந்த படைகள் பங்கெடுத்துக் கொண்டன. எடர் அணை என்பது 400 மீடர்கள் நீளமும், 41 மீடர்கள் உயரமும் உள்ளது. அது 25 கிலோமீடர்கள் நீளமும் 2 கிலோமீடர்கள் அகலமும் உள்ள ஜலத்தேக்கத்தை உடையது. ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய இந்த அணைக்கட்டு வெஸர், புல்டா நதிகளின் ஜலத்தைத் தேக்கிவைக்கிறது. இதிலிருந்து மின்சார ஸப்ளை அநேக இடங்களுக்குச் செய்யப்படுகிறது. அவ்வளவுபெரியதாகயில்லாத போனாலும், மோன் அணைக்கட்டு ரூர் பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கும், ஜனங்களின் உபயோகத்துக்கும் தண்ணீர் ஸப்ளை செய்து வருகிறது. அணைகள் உடைந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மைல்கள் கணக்கான பிரதேசங்களில் ஜலப்பெருக்கு உண்டாகிவிட்டது. 54 நகரங்கள் தண்ணீரில் தத்தளிக்கின்றன. 50,000 குடும்பங்களுக்கு வீடு இல்லை. மின்சார சாலைகளும், தொழிற்சாலைகளும் நாசமாகிவிட்டன. வெள்ளப்பெருக்கினால் ஜெர்மன் யுத்த தளவாட உற்பத்திகள் விசேஷமாக பாதிக்கப்பட்டுவிட்டன.

**இதாலி.**—இதாலிய தளங்கள் வெற்றிகரமாகத் தாக்கப்படுகின்றன. இதைப்பற்றிய விவரம் அடுத்த பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. முக்கியமான லக்ஷியங்கள். விடோடி ரோமா, ஆஸ்கெரோ, பாண்டலேரியா, ஸிஸிலி.

மத்தியதரைக்கடலிலுள்ள எதிரியின் கடற்படையை பிரிடிஷ் கடற்படை நாசம் செய்து வருகிறது.

**ருஷ்யா.**—நாவோராஸிஸ்க்குக்காக யுத்தம் நடைபெறுகிறது. டேலா, கலூகா, இஸியம், காலினின், ஸைவ்ஸக், வால்காவ், ராஸ்டாவ், விசிஸான்ஸ்க் என்னுமிடங்களில் சிறிய சச்சரவுகள் நடைபெறுகின்றன.

**பஸிபிக் யுத்தம்.**—அட்டேத் தீவில் அமெரிக்கர்கள் சாவதானமாக முன்னேறுகிறார்கள். ஹோல்ட் விரிகுடாவுக்கு சமீபத்திலுள்ள உன்னதமான இடத்தை மேமீ 17-ம் தேதி ஆக்கிரமித்தார்கள். மேமீ 19-ம் தேதியன்று ஸாரணுக் கணவாய் பிடிபட்டது. மேமீ 21-ம் தேதியன்று அட்டு கிராமம் அழிக்கப்பட்டது. ஜப்பானியப் படைகள் சிதறடிக்கப்பட்டன. மேமீ 23-ம் தேதி வந்த தகவல்களிலிருந்து சிகாகாப்புக்கும் நிகோலாஸ் ஏரிக்கும் சமீபத்தில் எதிர்த்து நிற்கும் எதிரித் துருப்புகளை நோக்கி கிழக்கு அட்டேத் தீவில் மூன்று முகமாக அமெரிக்கப்படைகள் முன்னேறுகின்றன.

நியூ கினியாவில் மூபோ பிரதேசத்தில் தரைச் சண்டை ஆரம்பித்திருக்கிறது. ஸலாமுவாவுக்குத் தென்மேற்கில் ஸிஸ்ஸெம்பாம் என்னுமிடத்திற்குச் சமீபத்தில் சில்லறைச் சச்சரவுகள் ஏற்பட்டன.

இந்த வாரத்தில் மேற்கு ஆஸ்திரேலியாவில் ஆனஸ்லோவுக்கருகிலுள்ள எக்மத் வளைகுடாவை ஜப்பானியர்கள் 2 முறை தாக்கினார்கள். முதல் தடவை ஒரு வெடிகுண்டும், இரண்டாம்தடவை 9 வெடிகுண்டுகளும் போடப்பட்டன. குண்டுகள் சமுத்திரத்தில் விழுந்ததால் சேதமில்லை.

பிரிஸ் பேனுக்கருகில் ஸெண்டார் என்று பெயர்கொண்ட ஆஸ்திரேலிய ஆஸ்பத்திரிக் கப்பலை ஒரு ஜப்பானிய நீர்மூழ்கி அக்கிரமமாகத் தாக்கியது. மீன் வெடியால் பிளக்கப்பட்டு கப்பல் மூழ்கிற்று. கப்பலில் செஞ்சிலுவை அடையாளம் போடப்பட்டும் தீபங்கள் போடப்பட்டுமிருந்தது. அதிலிருந்த 332 பிரயாணிகளில் 268 பேர்கள் உயிரிழந்தார்கள். 64 பேர்கள் தப்பினார்கள்.

**சீனு.**—வட ஹுனானில் டங்டிங் ஏரிக்கு மேற்கிலும், லெச்வானிலும், சிடுஹோவிலும் பலமான சண்டை நடைபெறுகிறது. 60,000 கொண்ட ஜப்பானிய் சேனை இச்சாங்கிலிருந்து யாங்ட்ஸீ நதியோரமாக முன்னேறுகிறது.

**பர்மா.**—பிரிடிஷ், பர்மீஸ், கூர்கா, இந்தியத் துருப்புகள் ஒன்றுபட்டு மத்திய பர்மாவில் மூன்றுமாதமாக நடத்திய யுத்தம் வெற்றிகரமாக முடிந்ததென்று சொல்லப்படுகிறது. அஸ்ஸாம் காடுகள் வழியாகச்சென்று பிப்ரவரி 16-ம் தேதியன்று சிண்ட்வின் நதியைத் துருப்புகள் தாண்டின. வெயர்லஸ் மூலமாகத் தகவல்களும் விமான மூலமாகவும் குடைகள் மூலமாகவும் ஆகார ஸப்ளைகளும் அவைகளுக்குக் கிடைத்தன. சில்லரைப் படைகளாகப் பிரித்துக்கொண்டு காடுகள் வழியாகவும் மலைகள் வழியாகவும் சென்று அவர்கள் பர்மாவுக்குள் 200 மைல்கள் சென்றார்கள். மார்ச்சு மாதத்தில் அவர்கள் மாண்டலேயிலிருந்து மிட்கினவுக்குப்போகும் இருப்புப்பாதையை நாசம் செய்தார்கள். அதை 75 இடங்களில் அறுத்துவிட்டார்கள். ஐராவதி நதிக்குக் கிழக்குப் பிரதேசத்திலும் சில துருப்புகள் நடமாடின. தங்களுடைய வேலையை முடித்துவிட்டு துருப்புகள் திரும்பிவந்துவிட்டன. இவர்களைச் சுற்றி வளைத்து அழித்துவிடுவது என்று எதிரி செய்த பிரயத்தனம் பலிக்கவில்லை. இந்த நிகழ்ச்சிகளின் முக்கியமானவிளைவு யாதெனில் மிட்கினவுக்கு வடக்கேயுள்ள காசின் படைகளைத் தாக்குதல் செய்யாமல் எதிரி நிறுத்தப்பட்டான்.

அரக்கான் போர்முனையில் ரோந்துவேலை நடைபெறுகிறது. விமானத்தாக்குதல் விவரங்கள் அடுத்தபகுதியில் வெளியிடப்பட்டிருக்கின்றன. காக்ஸ்பஸாரையும் சிட்டகாங் விமானக்கூடத்தையும் எதிரி பிரயோஜனமன்னியில் தாக்கினான்.

# சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**15—5—43** (சனிக்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

இரவு.—ரயில்கள், படகுகள், மோட்டார் லாரிகள், விமான நிலயங்கள்—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium), ஹாலந்து (Holland), ஜெர்மனி (Germany). (2 அச்சு விமானங்களும், 1 நேசதேச விமானமும் நாசமாக்கப்பட்டன).

**இதாலி (Italy),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

ரயில்வே ஸ்டேஷன், ராணுவ நிலயங்கள்.—ஸிஸிலியிலுள்ள டிராபானி (Trapani).

கப்பல்கள்.—கிரீஸைச் சுற்றிலும்.

**ருஷ்யா (Russia).**

(8—5—43 முதல் 15—5—43 முடிய ருஷ்ய விமான நஷ்டம் 104, அச்சு விமான நஷ்டம் 370.)

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயங்கள்.—நியூ கினியாவிலுள்ள பூனு (Buna), பின்ஸ்சாபென் (Finschhafen).

வனகானன் விமான நிலயம்.—நியூ பிரிடனிஉள்ள ரபால் (Rabaul).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), க்ளஸ்டர்முனை (Cape-Gloucester).

விமானச் சண்டைகள்.—லேங்கோர் (Langgoer). (3 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

ரபால் முனை.—பர்மா ரோட்டில் லாஷியோ (Lashio).

ரயில்வே ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள செடாவ் (Sedaw), அலான் (Alon), நெம்கான் (Namkan), பர்மாவிலுள்ள டேவாய் (Tavoy).

**16—5—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல் எதிரி விமான நிலயங்கள்.—பிரான்ஸிஉள்ளகேயன் (Caen), மோர்லே (Morlax).

ரயில்வே தளங்கள்.—யூ (Eu).

எதிரி வண்டிகள்.—பிரான்ஸ் கரை. (1 நேசதேச விமானம் காணப்படவில்லை. 2 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

இரவு.—இலக்குகள்—ரூர் (Ruhr), ரைன்லாந்து (Rhineland), பெர்லின் (Berlin).

**இதாலி (Italy),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

கடல் விமான தளம்.—இதாலியிலுள்ள லிடோடிரோமா (Lido di roma).

கப்பல்கள்.—ஸிஸிலி (Sicily).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

எதிரிக் கப்பல்கள்.—ஸாலமன்ஸிஉள்ள பூமின் பிரதேசம்.

விமான நிலயம்.—நியூ பிரிடனிஉள்ள காஸ்மாடா (Gasmata).

அட்டுதீவு (Attu Island).

அலூஷியனிஉள்ள கிஸ்கா (Kiska).

ரயில் ரோட் ஸ்தாபனங்கள்.—பர்மாவிஉள்ள ஷீவிபோ (Shwebo). மொக்ஷோகியான் (Moksogyon), ஷிகான் (Zigon).

களஞ்சியங்கள்.—பர்மாவிஉள்ள வெட்லெட் (Wetlet), மாகிஷாக் (Magyizawk).

ஜப்பான் தலைமை ஆபீஸ்.—மித்கினு (Myitkyina).

கிராமங்கள்.—பர்மாவிஉள்ள அக்யாப் (Akyab), பர்மாவிஉள்ள கேலிம்யோ (Kaleymyo).

துளயல்கள்.—பர்மாவிஉள்ள மாங்டா (Maungdaw).

**17—5—43.** (திங்கட்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—மோன், எல்டர் பாலங்கள், ஸார்ப் நீர்நிலை.—ஜெர்மனியிலுள்ள ரூர் (Ruhr).

இரவு.—எதிரித் துணைக்காவலோடு.—டச்சு கரை.

ரோடு, ரயில் போக்குவரத்துகள், எதிர் விமான தளங்கள்.—வடக்கு பிரான்ஸ், பெல்ஜியம்.

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

இலக்குகள்.—தெற்கு ஜெர்மனி. (3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

**இதாலி (Italy),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

துறைமுகம், விமான நிலயம்.—ஸார்டீனியாவிலுள்ள ஆல்ஜெரோ (Alghero).

சைனியத்தோடு இறங்கும் விமானங்கள்.—ஸிஸிலியிலுள்ள ஆகஸ்ட்டா (Augusta).

மின்சார நிலயம்.—ஸிஸிலியிலுள்ள போர்ட்டோ எம்போடாஸில் (Porto Empedocle).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—ரெகடா கடல் (Rekata Bay).

வேக் (Wake) தீவு.

ஜப்பானிச் சைனியங்கள்.—அட்டு (Attu) தீவு.

விமான நிலயம்.—நியூ ஐயர்லாந்திலுள்ள கேவியங் (Kavieng).

ஜப்பான் ரேடியோ ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாபிற்கு (Akyab) அருகில் பர்மாவிலுள்ள குடாபின் (Gudabyin).

போக்குவரத்து.—மாயூ (Mayu) நதி.

விமான நிலயம்.—காங்காங் (Kangaung), யெனங்காங் (Yenangvang), பர்மாவிலுள்ள ராதிடாங் (Rathedaung).

இலக்குகள்.—பர்மாவிலுள்ள (Taungup).

**18—5—43.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள்-பிரான்ஸிலுள்ள அபிவில்லி (Abbeville), பாய் (Poix).

இரவு —சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

6 வியாபாரக் கப்பல்கள்.—பான்டெலேரியா (Pentellaria) துறைமுகம்.

ஸிஸிலியிலுள்ள டிரபானி (Trapani).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—நியூ ஐயர்லாந்திலுள்ள கேவியாங் (Kavieng).

விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul), காஸ்மாடா (Gasmata), கிளஸ்டர் முனை (Cape Gloucester), நியூ கினியாவிலுள்ள லே (Lae).

நீர் முனை.—நியூ கினியாவிலுள்ள பின்ஸ்சாபென் (Finschhafen), அட்மிராலெட்டி தீவுகளிலுள்ள, லோரங்கா (Lorengau), நியூ பிரிடனிலுள்ள ஆரா (Arawe).

களஞ்சியங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab )

தண்ணீர் போக்குவரத்துக்கள்.—பர்மாவில் உள்ள மாயூ நதி (Mayu).

மோட்டார் வண்டிகள்.—பர்மாவிலுள்ள பூதிடாங் பிரதேசம் (Buthidaung).

இலக்குகள்.—டவுன்கூ (Toungoo).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள மின்பூ (Minbu).

ரயில்வே தளங்கள்.-பர்மாவிலுள்ள புரோம் (Prome).

**19—5—43.** (புதன்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ஜெர்மன் கப்பல் தளம்.—கீல் (Keil).

மாறுபட்ட தாக்கல்கள்.—வடக்கு பிரான்ஸ்.

இரவு.-ஜெர்மனியிலுள்ள பெர்லின் (Berlin).

இருப்புப் பாதைகள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

படகுகள்.—கெண்ட்(Ghent) பிரதேசம், பிரான்ஸிலுள்ள லிஸ் (Lys) நதி.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

மிலோ விமான நிலயம்.—ஸிஸிலியிலுள்ள 4 விமான நிலயங்கள்.—ஸார்டீனியா (Sardinia) (18 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

போக்குவரத்துகள்.-ஸார்டீனியா (Sardinia).

கப்பற்கட்டும் துறைகள்.—பான்டெலேரியா (Pantellaria).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரித்துருப்புகள்.-அட்டு தீவு(Attu Island).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

எதிரி லக்ஷியங்கள்.—கியாக்ட்லா (Kyauk-tlaw), கங்கா (Gangaw).

ஜப்பான் தண்ணீர் போக்குவரத்துகள்.—பர்மாவிலுள்ள கடற்கரையில் அக்யாப் (Akyab) முதல் ராம்ரீ தீவு (Ramree) வரையிலும்.

பர்மாவிலுள்ள டாங்கூப் (Taungup),

லேனிவா (Lanywa) தொழிற்சாலைகள்—பர்மாவிலுள்ள சாக்கிற்கு(Chauk)அருகில்.

எதிரி ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள மாக்வி (Magwe), தெய்த்மி (Thayetmye),பியாயி (Pyaye).

படுக்கான் எண்ணெய்க் கிடங்குகள்.—மாக்விக்கு (Magwe)த் தெற்கிலே.

**20—5—43.** (வியாழக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமானச்சண்டை.—பிஸ்கே கடல். (ஒரு எதிரி விமானம் நாசமாக்கப்பட்டது).

இரவு.—ரயில்வே தளங்கள்.—டெர்க்னியர் (Tergnier).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

ரயில்வே போக்குவரத்து லக்ஷியங்கள்.—பிரான்ஸ் (France), வடமேற்கு ஜெர்மனி (N. W. Germany).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

துணைக்காவலோடுகூடிய கப்பல் கூட்டம்.—பான்டெலேரியாவிற்கும் (Pantellaria) மாரெத்திமோ (Marettimo) விற்கும் இடையில்.

ரயில்.—இதாலியிலுள்ள கதான்ஸரோ (Catanzaro)விற் கருகில்.

மோட்டார் வண்டி, E-படகு.—ஸிஸிலி (Sicily).

விமான நிலயங்கள்.—ஸார்டீனியாவிலுள்ள வில்லாசிட்ரோ (Villacidro), டெஸிமோமன்னு (Decimomannu).

ரயில்வே படகு முடிவு.—மெஸ்ஸினு (Messina), ரெஜியோ டிகாலபிரியா (Reggio-Di Calabria).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்—நியூ கினியா (New-Guinea), நியூ பிரிடனில் முக்கியமாய் காஸ்மாடா (Gasmata), ஸாலமூவா (Salamaua).

ஜப்பானியத் துருப்புகள்.—அட்டு, அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

எதிரி லக்ஷியங்கள்.—லெப்மான் (Leptan), குவிவா (Kywegu), அரக்கான் (Arakan), முதல் டான்குப் (Taungup).

களஞ்சியங்கள்.—அக்யாப் (Akyab).

ஜப்பான் நீர் போக்குவரத்துகள்.—பர்மா கரைகளில்.

களஞ்சியங்கள்.—மூனிவா (Monywa), மிங்யான் (Myingyan), தெயத்மியோ (Thayetmyo).

ஒரு ஜப்பானியத் தொழிற்சாலை.—யெனங்யாங் (Yenang) பர்மாவிலுள்ள புரோம் (Prome).

யந்திரசாலை.—அல்லன்மியோ (Allamyo).

**21—5—43.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிமித்த ஐரோப்பா (Europe).

வேவு பார்த்தல்.—டச்சுக் கடற்கரை.

இரவு.—ரயில்வே லக்ஷியங்கள்—பிரான்ஸிலுள்ள ஆர்லியன்ஸ் (Orleans), ஜெர்மனியிலுள்ள பெர்லின் (Berlin).



எதிரி துணைக்காவலோடு கூடிய கப்பல் கூட்டம்.—பிரெஞ்சுக் கடற்கரை.

பகல்.—ஸப்மரீன் தளம்—வில்ஹெல்ம்ஷேவன் (Wilhelmshaven), எம்டன் (Emden).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி விமான நிலயங்கள்.—ஸிஸிலி (Sicly), ஸார்டீனியா (Sardinia).

துறைமுக ஸ்தாபனங்கள் டாங்கி ஸ்தலங்கள்.—பான்டெலேரியா (Pantellaria).

ரேடியோ நிலயம், தங்குமிடங்கள்.—ஸிஸிலியிலுள்ள மெலில்லி (Melilli).

தொழிற்சாலை.—ஸிஸிலியிலுள்ள பொஸல்லா (Pozalla), ஸிஸிலியிலுள்ள மெஸ்ஸினு (Messina).

இலக்குகள்.—தெற்கு இதாலி.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—காஹிலி (Kahili), பெல்லாலி (Ballale).

அட்டு கிராமம்.—அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

ஜப்பான் தளம்.—நியூ கினியா (New Guinea), நியூ பிரிடன் (New Britain).

ரயில்வே ஸ்டேஷன்.—இண்டா (Indaw), அக்யாப் (Akyab) தீவு.

விமான மிறங்குமிடங்கள்.—பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay).

தொழிற்சாலைகள்.—பர்மாவிலுள்ள சாக் (Chauk),

**22—5—43.** (சனிக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—7 ரயில்கள்—பிரான்ஸ் (France).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy).
மத்தியதரைக்கடல் (Mediterranean).

பேர்ஸோ (Borizzo), விமான நிலயமும் இதர விமான நிலயங்களும்.—ஸிஸிலி (Sicily).

கப்பல்கள்.—எஜியான் (Aegean) கடல்.

ருஷ்யா (Russia).

(15—5—43 முதல் 22—5—43 வரையுள்ள வாரத்தில் ருஷ்ய விமான நஷ்டம் 61. எதிரி நஷ்டம் 313).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East.)**

**எதிரிக் கப்பல்கள்.**-மார்டாபன் (Martaban) கடல்.

**ரயில்வே ஸ்தாபனங்கள்.**—பர்மாவிலுள்ள கான்பாலு (Kanbalu).

**ஜப்பானிய ஸ்தாபனங்கள்.**-புரோம் (Prome), ரங்கூன் (Rangoon), டாங்குப் (Taungup).

**ஜப்பானிய தளம்.**-நியூ கினியா (New Guinea), நியூ பிரிடன் (New Britain).

**ஜப்பானியச் சைனியங்கள்.**-அட்டு (Attu) தீவு.

**23—5—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

**பகல்.**—எதிரிப் போக்குவரத்துகள்—ஆக்கிரமித்த பிரதேசங்களில்.

**3 எண்ணெய் வண்டிகள், விமானமிறங்குமிடங்கள்.**—வடக்கு பிரான்ஸ்.

**நிலக்கரி அடுப்பு.**—பெல்ஜியத்திலுள்ள ஸிப்ரக்கி (Zeebrugge).

**தொழிற்சாலை நகரம்** ஜெர்மனியிலுள்ள டார்ட்மண்ட் (Dortmund), E படகுகள்.—வைட் (Wight) தீவு.

**இதாலி (Italy),**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

**கப்பற் கட்டும்துறைகள் சாமான் நிலயங்கள்.**-பான்டெலேரியா (Pantellaria).

**காரிபோர்ட் துறைமுகம் (Cari Forte).**

**விமான நிலயம்.**—ஸார்டீனியா (Sardinia).

**எதிரிக் கப்பல்கள்.**—ஏஜியன் கடல், கிரீஸ்.

**சண்டைக் கப்பல்கள்.**—கட்டேனியாவின் (Catania) தென் கிழக்குக்கரை.

**விமான நிலயம்.**—லேம்பெடுஸா (Lampeduasa).

**புகைவண்டி.**—இதாலியிலுள்ள கதான்ஷரோ (Catanzaro).

**ருஷ்யா (Russia).**

**விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

**ஜப்பானிய விமான நிலயம்.**—காஸ்மாடா (Gasmata), ரபால (Rabaul), கேவியங் (Kavieng).

**ரயில்வே இலக்குகள்.**—பர்மாவிலுள்ள ஈ (Ye), அக்யாப் தீவு Akyab (Island).

**24—5—43.** (திங்கட்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

**பகல்.**—துணைக்காவலோடுகூடிய கப்பல்கள்-டச்சுக் கடற்கரை.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**16—5—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

லண்டன் (London) பிரதேசம். (3 எச்சரிக்கைகள் மட்டும்).

**ருஷ்யா (Russia).**

**விமானச் சண்டைகள்.**—குபான் பிரதேசம் (Kuban).

**தூரக்கிழக்கு (Far East).**

வாவ் (Wau) பிரதேசம். (பல ஜப்பான் விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

நியூ கினியாவிலுள்ள மோர்ஸ்பி துறைமுகம் (Port Moresby) (2 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**பிரிடன் (Britain).**

**இடங்கள்.**—தென்கிழக்கு இங்கிலாந்து, எஸ்ஸெக்ஸ் (Essex), லண்டன் (London) சுற்றுப்பிரதேசம்.

**ருஷ்யா (Russia).**

**நஷ்ய விமான நிலயங்கள்.**—ருஷ்ய அரண்களுக்குப்பின்.

**தூரக்கிழக்கு (Far East).**

**விமானச் சண்டைகள்.**—மாங்டா (Maungdaw) விற்கு வடக்கே.

**18—5—43.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

லண்டன் பிரதேசம் (சில மனிதர் கொல்லப்பட்டனர்).

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

மால்டா (Malta) பிரதேசங்கள்.

**ருஷ்யா (Russia).**

லிஸ்சான்ஸ்க் (Lisichansk) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

**அமெரிக்க சைனியங்கள்.**—கூடல்கனார் (Guadalcanar), ரஸ்ஸல் தீவு (Russel Island).

**19—5—43.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

**லண்டன் பிரதேசம்.**—தென்கிழக்கு இங்கிலாந்தில் சில இடங்கள், எஸ்ஸெக்ஸ் (Essex), (சிறிது சேதம் ஏற்பட்டது).

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

**விமானச் சண்டை.**—ஸிஸிலியன் கால்வாய் (1 ஜப்பானிய விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது.)

**தூரக்கிழக்கு (Far East).**

**நேசதேச ஸ்தலம்.**—நியூ கினியாவிலுள்ள வாவ் (Wau) (பல ஜப்பானியக் கப்பல்கள் சேதமாக்கப்பட்டன).

**20—5—43.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

**லண்டன் பிரதேசம்.**—(எச்சரிக்கை மட்டும்).

**ருஷ்யா (Russia).**

**நஷ்யப் போக்குவரத்து.**—ருஷ்ய அரண்களுக்குப் பின்னால்.

தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன்ஸிலுள்ள கூடல்கனுர் (Guadalcanar).

ஒரு நகரம்.—தென்மேற்குக் கரை.

**21—5—43** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் பிரதேசம் (எச்சரிக்கை மட்டும்) (1 எதிரி விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது.

ருஷ்யா (Russia).

லிஸ்சியான்ஸ்க் (Lischiansk) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—காக்ஸ் பஸார் (Cox's Bazaar). (4 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**22—5—43.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

நஷ்ய விமான நிலயங்கள் முன் அரணுக்குப் பின்னல்.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள் சிட்டகாங் (Chittagang) பிரதேசம் (9 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**23—5—43.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

நகரம் இங்கிலாந்தின் தென்கிழக்குக் கரை.

இங்கிலாந்தின் தென்கரையில் 2 இடங்கள். (3 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள் அட்டுதீவு.

**24—5—43.** திங்கட்கிழமை.

பிரிடன் (Britain).

நகரங்கள் இங்கிலாந்தின் வடகிழக்கு கரையில்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள் கெர்ச் ஜலசந்தி(Kerch Straits).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**மிஸ்டர் சர்ச்சில் வாஷிங்டனில் செய்த பிரசங்கம்.** மேமீ 19-ம் தேதியன்று மிஸ்டர் சர்ச்சில் அமெரிக்க காங்கிரஸ் சபைகளின் சேர்ந்த கூட்டத்தில் இரண்டாவது தடவை பேசினர். முதல் தடவை பிரசங்கம் செய்தபொழுது ஜப்பானியர் துரோகமாக தாக்க ஆரம்பித்து தனிப்பட்ட நாடாக இருந்த அமெரிக்காவை யுத்தத்தில் கலந்துகொள்ளும்படியாக ஏற்பாடு செய்த தருணம். அப்பொழுது தேசங்கள் ஒன்றுபட்டு யுத்தம் செய்யவேண்டுமென்று மிஸ்டர் சர்ச்சில் பேசினர். இப்பொழுது பேசியதும் அதையொட்டியே இருந்தது. அவர் திட்டம் போட்ட மகத்தான படையெடுப்பு வெற்றிகரமாக முடிந்துவிட்டது. தன்னுடைய வெற்றிப் பெருமையை அவர் வெளியிட்டதோடு அவருடைய சொற்பொழிவு வன்மையாலும், உருக்கத்தாலும் நேசதேசங்கள் மேன்மேலும் முயற்சி செய்யவேண்டுமென்றும் வற்புறுத்தினர். உலகத்தின் கண் முன் நிற்கும் இந்த மிஸ்டர் சர்ச்சில் சபையில் பேச ஆரம்பித்தபொழுது பலத்த கர கோஷம் ஏற்பட்டது. தனித்திருக்க வேண்டுமென்ற கக்ஷிக்காரர்களும் யுத்தத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்ற மனப்பான்மையுள்ளவர்களும் வரவேற்றதைக் கண்டு மிஸ்டர் சர்ச்சிலின் கண்களில் கண்ணீர் பெருகிற்று. மூக்குக் கண்ணாடியைத் தள்ளிக்கொண்டு, விழித்துப் பார்த்து ஒரு பழைய மாலுமிபோல் சமாளித்துக்கொண்டார். பிறகு நாப்கெர்ரியைப்போல பகிரங்கமாகவும் பலமாகவும் பேச ஆரம்பித்து எதிரிகளை நிந்தித்தும் சிநேகிதர்களை ஸ்தோத்திரம் செய்தும் வந்தார். உயர்தர நியாய இலாகா நீதிபதிகளும், ராஜ தந்திரிகளும், சாதாரண ஜனங்களும் அடிக்கடி கரகோஷம் செய்தார்கள். ஸெனட் சபைக் கூட்டத்தில் இம்மாதிரி உருக்கமான சொற்பொழிவு நடந்ததேயில்லையென்று சுற்றுச்சாலையிலுள்ளவர்கள் வியப்புற்றுர்கள். முக்கியமான சொல்வன்மையைவிட பிரசங்கம் செய்தவரின் ரூபத்தைக் கண்டுதான் அவர்கள் மயங்கினர்கள்.

மிஸ்டர் சர்ச்சில் தன்னுடைய சொற்பொழிவில், ஜப்பானைத் தாக்குவதில் பிரிடனுக்கு அக்கரையில்லையென்றும், ஐரோப்பாவில் ஹிட்லரை முறியடித்த பிறகு அமெரிக்காவை நட்டாத்தில் விட்டுவிடுமென்றும், ஜப்பானை அமெரிக்கா தன்னந்தனியாக எதிர்க்கவேண்டும் என்று சொல்லப்படும் அபிப்பிராயம் தப்பென்று விளக்கிக்காட்டினர். ஐரோப்பாவில் ஹிட்லரை முறியடித்துவிட்டால் ஆசியாவில் ஜப்பான் விழுந்துவிடுமென்பதும், ஆசியாவில் ஜப்பான் விழுந்துவிட்டாலும் ஐரோப்பாவில் ஜெர்மனி விழுந்துவிடாதென்பதும் சரியான

கொள்கைகளென்றாலும் ஜப்பானை முறியடிப்பதில் அமெரிக்காவைவிட பிரிடனுக்கு அதிகக் கவலையுண்டென்றும் அவர் எடுத்துக் காட்டினார். எதை முந்திச் செய்வதென்பதுதான் முக்கியமான பிரச்னை. அமெரிக்கா பிலிப்பைன்ஸை இழந்ததென்றால், பிரிடனுக்கு பர்மாவும், மலேயாவும் சிங்கப்பூரும் நஷ்டமாகிவிட்டன. அமெரிக்காவை ஜப்பான் தாக்கலாமென்பது சமீபத்தில் நடைபெறக் கூடியதில்லை. இந்தியாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் தான் சமீபத்தில் ஆபத்து ஏற்படக்கூடும். இதற்காகத்தான் வடகிழக்கு எல்லைப் பிராந்தியத்தில் பிரிடன் ஏராளமான துருப்புகளை வைத்திருக்கிறது. பீல்ட் மார்ஷல் வேவல் வாஷிங்டன் மகாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருக்கிறார்.

வி வி வி வி வி

**கால நீடிப்பு.** இந்தச் சொற்பொழிவில் மற்றொரு முக்கியமான விஷயம் அறிவிக்கப்பட்டது. காலப்போக்கு நேசநாடுகளுக்கு சாதகம் அளித்துவிட்டதென்று மிஸ்டர் சர்ச்சில் சொன்னார். யுத்த ஆரம்பத்தில் நேசநாடுகள் தயாராகயில்லாதபொழுது நேசதேசத்தின் பலத்தை உண்டுபண்ணுவதற்கும் தற்காப்பு முறைகளை ஏற்படுத்துவதற்கும் காலஹரணம் தேவையாயிருந்தது. இப்பொழுது நேசநாடுகள் வலிமையடைந்துவிட்டன. எதிரி பலஹீனமடைந்து விட்டான். வட ஆபிரிக்காவில் நமக்கு கேந்திரஸ்தானம் கிடைத்துவிட்டது. ஆகையால் தாமதம் செய்வது கூடாது. அடிகள் துரிதமாக விழவேண்டும். காற்றுள்ளபோதே தூத்திக்கொள்ள வேண்டும். எதிரி சோர்வடைந்திருக்கும்பொழுதே அவனை முறியடிக்கவேண்டும். இப்பொழுது தாமதம் செய்தால் எதிரி களைப்பாற்றி பலமடைந்துவிடுவான்.

காலஹரணம் செய்யத்தான் ஹிட்லர் கேப் பான் வரையில் ஆபிரிக்கச் சண்டையை நடத்திவந்தான். எல் அலாமீனிலேயே ஆபிரிக்க யுத்தம் முடிவடைந்து விட்டதென்று அவனுக்குத் தெரியும்.

வி வி வி வி வி

**அதிசயம்.** இதைப்பற்றி வியவகாரத்துக்காக "ஏன் பிஸர்ட்டா அரண்களைக் காலிசெய்து, தற்காப்பில்லாததும், விமானப்படை, இதாலியக் கடற்படையின் உதவியுமில்லாததுமான கேப் பான் பிரதேசத்துக்கு ஹிட்லர் பின்வாங்கினானென்றும் கேள்வி பிறக்கலாம்.

வி வி வி வி வி

**ஹிட்லரின் யோசனை.** வட ஆபிரிக்கா யுத்தத்தில் இதுதான் ஆச்சரியம். இதன் மர்மம் கால அளவில்தான் வெளியாகும். இதுதான் ஹிட்லரின் தந்திரம். கதியற்று, நிச்சய புத்தியற்று, மனோதிடம் குறைந்து, புத்தி பேதமடைந்ததுதான் இந்த அதிசயத்துக்குக் காரணம். பிரிடிஷ் கடற்படையிருக்கும்பொழுது டங்கர்க்கைப்போல் ஜெர்மன் துருப்புகளை ஆபிரிக்காவிலிருந்து வாபஸ் பெறுவது அசாத்தியம் என்ற அறிவும் காரணமாகும்.

வி வி வி வி வி

**இரண்டு நோக்கம்.** ஹிட்லர் ஆபிரிக்க யுத்தம் நடத்தியதற்கு இரண்டு காரணங்கள். இதாலியைச் சந்தோஷப்படுத்துவதற்காக, அழிந்துவரும் இதாலிய சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றுவது என்ற ராஜீய நோக்கம் ஒன்று. மற்றொன்று ராணுவ அவசியம். கூடியவரையில் சமாளித்து காலஹரணம் செய்வது. கடைசி காலத்தில் தப்பி ஓடுவதும், எதிர்த்து நிற்பதும் முடியாமல்போன பொழுது சரணடைவதைத் தவிர வேறு கதியில்லாமல் போயிற்று.

ஆகையால் இதற்குமேல் ஹிட்லர் காலஹரணம் செய்யவில்லை. செய்யக்கூடவில்லை. அவனுடைய யுத்த தந்திரத்தை அவன் மாற்றவில்லை. சந்தர்ப்பக் கோளாறு ஏற்பட்டு அதற்கு வசமாகிவிட்டான். முடிந்திருந்தால் அவன் இன்னும் சமாளித்துக் கொண்டேதானிருந்திருப்பான்.

வி வி வி வி வி

**ஐரோப்பிய கோட்டை.** ஆகிலும் ஆபிரிக்காவில் நடந்த ஆறுமாத யுத்தத்துக்குள்ளாக, ஏராளமான தியாகத்தின் பேரில் ஐரோப்பிய தற்காப்புகளை ஹிட்லர் பலப்படுத்திவிட்டானென்பதும் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். அசைக்கமுடியாத ஐரோப்பிய அரண் ஏற்பட்டுவிட்டதென்று சொல்வது வீண்பேச்சு.

அமெரிக்க ராணுவ வியாக்யானியான மேஜர் ஜார்ஜ் பீல்டிங் நியூ யார்க் ஹெரால்ட் ட்ரிபூன் பத்திரிகையின் ஏப்ரல் 5-ம் தேதி பதிப்பில் சொல்லுவதுபோல "எல்லைச் சரகத்தில் தற்காப்புக்காக அரண் கட்டும் எந்த தேசமும் ஏற்கனவே தோல்வி பெற்றுவிட்டது. இந்தச் செய்கையினலேயே அதனுடைய அழிவையும் பலஹீனத்தையும் அது வெளிப்படுத்துகிறது. யுத்தம் செய்பவர்களின் திடத்தையும், வலிமையையும்விட கற்களையும், சுண்ணும்பையும் அது நம்புகிறது. இதற்குக் காரணம் படைகள் சண்டைபோட பிரியப்படுகிறதில்லை அல்லது படை பலத்துக்கு வேண்டிய ஆட்களில்லை என்பதுதான். எவ்வகையிலும் அரண் கட்டுவதென்பது வரப்போகும் நாசத்தைக் குறிப்பிடுகிறது. பிராசீன சரித்திரமும், நவீன சரித்திரமும் இந்தச் உண்மையைத்தான் வெளிக்காட்டுகிறது. உதாரணமாக சீனவின் மகத்தான அரண், ரோமன் அரண்கள், மாகினே அரண், மாரத் அரண், இதன் காரிய காரணங்கள் ஸ்பஷ்டமானவை.

"எல்லைச் சரகத்தில் அரண் கட்டுவதென்பது ராணுவ தந்திரத்தில் முட்டாள்தனமான கொள்கை. எல்லா இடத்திலும் அது பலமாகயிருக்கவேண்டும். அரணும் எல்லா இடங்களிலும் வலுவாகயிருக்கவேண்டும். நிதர்சனமாக இந்த வலுவானது அதைப் பாதுகாக்கும் துருப்புகள் வலிமையைப் பொருத்ததாகும். அதாவது துருப்புகளை ஒரு கோடு நெடுக அமைக்கவேண்டும். எதிரி பலமாக ஒரு இடத்தில் ஒன்றுபட்டுத் தாக்கினல் அந்த அரணைப் பிளந்துவிடலாம்".

அரண் அமைப்பதிலிருந்து எந்த இடத்தில் தற்காப்பு செய்யவேண்டுமென்பது நிர்த்தாரணம் செய்யப்படுகிறது. ஆகிலும் வெளியேயிருக்கும் எதிரியானவன் ஒத்திகை செய்வதற்கும் தாக்குதல் செய்வதற்கு சரியான காலம், தேசம், முறை இவைகளை நிர்த்தாரணம் செயவதற்கும் வேண்டிய வசதியளிக்கிறது. இந்த நிலைமையில் படைகளின் சலனமும் வலிமையும்தான் அரணின் பலஹீனமான இடத்தைத் துளைத்துவிடாமல் தற்காப்பு செய்ய முடியும்.

அரண் அமைக்கும் நிலைமை வந்துவிட்டதென்றல் துருப்புகளைச் சரியானபடி ஒத்திகை செய்து யுத்தம் நடத்த முடியவில்லையென்று ஒப்புக்கொண்டதாகும். எந்த சமயத்திலும், எந்த இடத்திலும் திடீரென்று ஏமாற்றம் ஏற்படலாம்.

அத்தருணம் ஏற்படும் வரையில் முற்றுகைக்குள்பட்டவர்கள் பத்திரமாகயிருக்கிறேமென்று நினைத்து, தேசத்தின் தற்காப்புக்குவேண்டிய யுத்த முயற்சிகளிலும் அச்சிரத்தை காட்டக்கூடும். இவ்விதமிருந்ததால்தான் 1940-ம் வருஷத்தில் பிரான்ஸ் விழுந்தது.

ஆகையால், ஆர்க்டிக் கடலிலிருந்து ஏஜியன் கடல் வரையில் பிளக்கமுடியாத அரண்கள் ஐரோப்பா பூராவிலும் கட்டப்பட்டுவிட்டன என்று கோயபல்ஸ் முக்கியமாகப் பிரசாரம் செய்துவருகிறன். இது எல்லா இடத்திலும் பலமாகயில்லையென்பதும் இதற்குவேண்டிய உபபலங்கள் இல்லாவிட்டால் அரண்கள் பிரயோஜனமில்லையென்பதும் ஸ்பஷ்டமானது. நான்கு வருடங்கள் நடைபெற்ற யுத்தத்துக்குப்பின் ஜெர்மன் வலிமை குறைந்துவிட்டது. போக்குவரவு மார்க்கங்களின் குறைவினல் துருப்புகளைச் சலனம்செய்வது சிரமமாயிருக்கிறது. 1918-ம் வருஷத்தில் இதே மாதிரியாக வலுக்குறைந்திருந்தபொழுது ஸ்விட்ஸர்லாந்துக்கும் கடலுக்கும் மத்தியிலுள்ள குறுகிய பிரதேசத்தை ஜெர்மனி காப்பாற்றமுடியவில்லை. ஐரோப்பிய அரண் என்பது ஒரு பூச்சாண்டி.

வி வி வி வி வி

**எப்பொழுது எங்கே தாக்குதல்.** ஆபிரிக்காவில் கிடைத்த வெற்றியிலிருந்து குதூஹலமடைந்தவர்கள் இந்த அரணை எவ்விடத்தில் தாக்குவதென்று கேட்கிறர்கள். எங்கே, எப்பொழுது என்றும் எதிரொலி கிளம்பியிருக்கிறது. "பொறுமையுடனிருங்கள்" என்று சொல்லுவோம். வாஷிங்டன் மகாநாட்டில் மகத்தான முடிவுகள் ஏற்பட்டிருக்கும். இந்த ரகசியம் சர்ச்சிலுக்கும், ரூஸ்வெல்டுக்கும்தான் தெரியும். ஜோஸியம் சொல்லுவது வீண் பேச்சாகிலும், ஒன்று ஸ்பஷ்டமானது. ஆபிரிக்கா வெற்றியை ஒட்டி மத்தியதரைக்கடலில் இறங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெறவேண்டும். அதன் மூலம் மத்தியதரைக்கடலில் தாராளமாக நடமாடுவதற்குக் குந்தகமாக உள்ளவைகளை அப்புறப்படுத்தவேண்டும். இப்படிச் செய்யாவிடில் நமக்குக்கிடைத்த லாபங்கள் வீணுகிவிடும். ஸிஸிலி, ஸார்டீனியா, பான்டலேரியா, இதாலியின் தெற்குபாகம் இவைகளை நேர்முகமாகத் தாக்கிப் பிடித்துவிடவேண்டும். ருஷ்யாவுக்கு ஏற்பட்டிருக்கும் பளுவைக் குறைப்பதற்காகவும், கிழக்கு மத்தியதரைக்கடலை விடுவிப்பதற்கும் பால்கன் நாடுகளில் துருப்புகளை

இறக்குவதற்கும், துருக்கியின் உதவிகொண்டு குறுக்குவசமாக ஒரு தாக்குதலையும் ஆரம்பிக்க வேண்டும். இவைகளை நடத்துவதற்கு ஆபிரிக்காவில் செய்ததைவிட மகத்தான ஏற்பாடுகள் நடைபெறவேண்டும். பெரிய கடற்படைவேண்டும். இவைகளைத் தயார்செய்வதற்கு அவகாசம் வேண்டும். இதே சமயத்தில் ருஷ்யாவைத் தாக்க மறுமுறை ஹிட்லர் பிரயத்தனம் செய்யலாம். காலத்தின் மதிப்பு மிகவும் உயர்வானது. ஆகிலும் காலநிலை பயங்கரமாகயிருக்கிறது. மிஸ்ட்டர் சர்ச்சில் சொன்னபிரகாரம் ஏதாவது ஒரு தவறுதல் ஏற்பட்டால் வருஷக்கணக்காக நமக்கு ஏற்பட்ட லாபங்கள் போய்விடும். ஆகிலும் பொறுமையும் விடாமுயற்சியும் வெற்றியளிக்கும். ஆகையால் பொறுமையுடனிருங்கள்.

வி வி வி வி வி

**கால சக்கிரம்.** வருங்காலப் போக்கைப்பற்றி நேசதேசத்தாருடையவும் அச்சு நாடுகளுடையவும் மனோநிலை விசேஷமான மாறுதலடைந்துவிட்டது. நேசநாட்டாரைவிட அச்சுநாடுகள்தான் "எப்பொழுது எந்த இடத்தில்" என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். நிலைமை மாறிவிட்டது. நேசநாடுகள் முன்னேறித்தாக்க ஆரம்பித்துவிட்டன. எதிரிகள் மனம் பதைக்கிறது. "ஹிட்லர் அடுத்த படி எங்கே தாக்குவான்" என்ற பிரச்னை ஓய்ந்துவிட்டது. ஆபிரிக்கா யுத்தத்தில் ஈடுபட்ட துருப்புகளும், மத்தியக் கிழக்கிலும், மற்ற இடங்களும் மற்ற கண்டங்களிலும் தயாரிக்கப்படும். துருப்புகளும் சேர்ந்து நேசநாடுகள் அடுத்தபடி எங்கே தாக்குவார்களென்ற பேச்சு கிளம்பிவிட்டது.

வி வி வி வி வி

**விமான யுத்தம்.** ஹிட்லரின் ஐரோப்பாவையும், முஸோலினியின் இதாலியையும் நாசமாக்கிவரும் விமான நடவடிக்கைகளிலிருந்து மற்றொரு இழிவும் ஏற்படுகிறது. இது விமானத் தாக்குதல் இல்லை, ஒத்திகையில்லை. ஆனால் மகத்தான யுத்தம், இடைவிடாமல், இறக்கமன்னியில் இரவு பகலாய் மணிக்கு மணியாக இந்த விமான யுத்தம் நடைபெறுகிறது. பிரிடிஷ் விமானப்படையின் மார்ஷலான வைகௌண்ட் டிரெஞ்சார்ட் என்பவர் "தாக்குதல்" என்ற பதப்பிரயோகம் பொருத்தமானதல்ல. முற்றிலும் மாறுன அபிப்பிராயத்தைக் குறிப்பிடுகிறது. இந்த வெடிகுண்டு வீசுதல் மகத்தான நிகழ்ச்சிகள். பலமான தற்காப்புகளையும் தகர்க்கின்றன. பழைய காலத்தில் பெரிய சண்டைகளோடு இவைகளை ஒப்பிடலாம் என்று சொன்னார். இந்த விமானச் சண்டைகள் வரிசையாக நடப்பதோடு தேசப் படத்தில் எல்லா பாகங்களிலும் நடைபெறுகின்றன என்றும் ஈடன் அபிப்பிராயப்படுகிறார். ஜெர்மனியைக் காப்பாற்ற வேண்டுமானால் பெர்லினைத் தாக்கும் நேச விமானங்களை ஜெர்மனி வழிமறித்துத் தாக்கவேண்டுமென்று ஸர் ஆர்க்கிபால்ட் ஸிங்கிளேர் சொல்லுகிறார்.

சமீப காலத்தில் பிரிடிஷ் விமானப்படை ரூர் பிரதேசத்தை விசேஷமாகத் தாக்கியிருக்கின்றது. விமானத் தாக்குதலைத் தடுப்பதற்காக வேண்டிய தற்காப்புகளைச் செய்வதற்கு 7,50,000 மனிதர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். மற்றொரு 7,50,000 ஜனங்கள் நெருப்பு அணைக்கும் வேலையிலும் ஜெர்மனியிலுள்ள சண்டை விமானங்களின் பாதிபாகம் தற்காப்பிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

வி வி வி வி வி

**அணைகளை உடைத்தல்.** 17-ம் தேதியன்று விமானங்கள் மோன், ஸார்ப், எடார் என்னும் அணைகளை உடைத்துவிட்டன. ரூர் பிரதேசத்துக்கு ஜல ஸப்ளை செய்யும் ஜலாசயங்கள் உடைக்கப்பட்டன. மின்சார சாலைகள் நாசமாகிவிட்டன. 54 நகரங்களும், கிராமங்களும் ஜலத்தில் தத்தளிக்கின்றன. 50,000 குடும்பங்கள் வீடு இல்லாமல் தவிக்கிறார்கள். ஏமாற்றமடைந்து 9,000 ஸாப்பர்களை இந்தப் பிரதேசங்களுக்கு ஹிட்லர் அனுப்பியிருக்கிறான். வெறிபிடித்து இதற்கு யூதர்கள்தான் காரணமென்றும் அவர்கள்தான் அணைகளிருக்கும் இடங்களை ரகசியமாக வெளிப்படுத்திவிட்டார்களென்றும் அவர்களைப் பழிவாங்கவேண்டுமென்றும் ஹிட்லர் உறுமுகிறான். இவைகளிருப்பதை பிரிடிஷ் விமானிகள் வேவுபார்த்து வெளியிட்டார்கள். கம்மாண்டர் கிப்ஸனிடமுள்ள பாம்பர் படை இந்தச் சிரமமான வேலையைச் செய்து முடித்தது.

வி வி வி வி வி

**அட்டுத்தீவு.** அட்டுத்தீவை அமெரிக்கர்கள் திருப்திகரமாக ஆக்கிரமித்து வருகிறார்கள். இந்தப்பிராந்தியத்தில் அமெரிக்கர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்களென்று ஜப்பானியர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். அதிக வெற்றிகளுக்கு இது சூசகம்.

அட்டுத்தீவு உள்பட அலூஷியன் தீவுகள் என்பது 150 தீவுகள் கோர்வையுள்ளது. அமெரிக்காவிலுள்ள அலாஸ்காவுக்கும் ஆசியாவிலுள்ள காமச்சிட்காவுக்கு மிடையே உள்ள வட பஸிபிக் சமுத்திரத்தில் 1,200 மைல்கள் பரவியுள்ளது. இது ஆதியில் ருஷ்யாவுக்குச் சொந்தமாயிருந்தது. 1867-ம் வருஷத்தில் அமெரிக்கர்கள் இதை விலைக்கு வாங்கினார்கள்.

இந்த தீவுத் தொடர்களில் ஒன்றான கிஸ்காவை ஜப்பான் 11 மாதங்களுக்குமுன் 1942-ம் வருஷம் ஜூன்மாதம் 13-ம் தேதியன்று ஆக்கிரமித்தது. வேக், குவாம் தீவுகள் நஷ்டமான பிறகு, கிஸ்காவிலிருந்து அமெரிக்காவுக்கும், ருஷ்யாவுக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

அட்டுத்தீவை அமெரிக்கர்கள் பிடித்துவிட்டால் முக்கியமான விளைவுகள் ஏற்படும். இந்தத் தீவு மேற்குக் கோடியிலிருக்கிறது. ஜப்பானுக்குச் சமீபமானது. இங்கிருந்து உயர்தர வெடி விமானங்கள் புறப்பட்டு ஜப்பானைத் தாக்கிவிட்டுத் திரும்பிவந்து விடலாம். அலூஷியன் தீவுகளில் மற்றொன்றான தீவும் கிஸ்காவுக்குக் கிழக்கிலுமுள்ள அமாசிட்கா என்னும் தீவு ஏற்கனவே அமெரிக்கர் வசமாகிவிட்டது. கிஸ்கா எதிரி வசமிருந்தாலும் இதை விலக்கிவிட்டு சுற்றிப் போய் அட்டுவைப் பிடித்துவிட்டு கிஸ்காவைத் துண்டித்துவிடலாம்.

அலூஷியன் தீவுகளை நாம் முழுதும் பிடித்துவிட்டால் வடக்கு சமுத்திரத்திலிருந்து ஜப்பானியர்களைத் துரத்திவிடலாம். ஏராளமான ஸப்ளைகளை காமச்சிட்காவிலுள்ள பெட்ரோபாலாவ்ஸ்க்குக் கொண்டுபோய் ருஷ்யாவின் உதவிக்கு அனுப்பலாம்.

வி வி வி வி வி

**டச்சுத் துறைமுகம்.** சமீப காலத்தில் ஜப்பானியர்கள் அலூஷியன் தீவுகளில் ஒன்றாகிய டச்சுத் துறைமுகம் என்ற தீவைத் தாக்கினார்கள். இதன் கேந்திர ஸ்தானத்திலிருந்து இதை வட பஸிபிக் சமுத்திரத்தின் ஸிங்கப்பூர் என்று சொல்லுகிறார்கள். இது டோக்கியோவிலிருந்து 28,500 மைல்கள் தூரத்திலிருக்கிறது. இதில் பனி உறைகிறதில்லை. ஜப்பானிய தேசத்திற்கு இதிலிருந்து அபாயம் ஏற்படக்கூடும். இது பலமான விமானக்கூடம், கடற்தளம்.

வி வி வி வி வி

**சீனாவுக்குப்போகும் புதியரஸ்தா.** சீனாவுக்குப் போகும் புதிய ரஸ்தா அமைக்கப்பட்டு விட்டதென்று தெரியவருகிறது. ரஸ்தா ஆரம்பமாகும் காலிம்பஸ்க் என்னுமிடம் பம்பாயிக்கும் சுங்கிங்குக்கும் நடு மத்தியிலிருக்கிறது. பம்பாயிலிருந்து காலிம்பாஸ்குக்குப் போகும் வழியை 4 நாட்களில் கடந்து விடலாம். மற்ற பாதி பாகத்தைக் கடப்பதற்கு 12 வாரங்கள் பிடிக்கும். முதல் பாதி பாகத்தில் சாமான்களை ரெயில்வே சாமான் வண்டிகளில் ஏற்றிச்செல்லலாம். மற்ற பாதிபாகத்தில் கழுதைகளின்மேல் அவைகளை ஏற்றிச் செல்லவேண்டும். ஆகையால் கொண்டு போகக்கூடிய சாமான்கள் குறைவுபடுகின்றன. ஆஸ்பத்திரி வசதிகள் முதலில் கொண்டு போகப்படவேண்டும். ஆகிலும் எவ்வளவு சிறியதாயிருந்தாலும் அது உதவியளிக்கிறது. நெடுநாளாகயிருந்த மனப்பான்மையை விட்டு ஸப்ளைகள் கொண்டு போவதற்கு மார்க்கத்தை அமைக்க திபெத் ஒப்புக்கொண்டதென்பது மெச்சத்தகுந்தது.

வி வி வி வி வி

**பர்மாவின் முன்னேற்றம்.** மூன்று மாதங்களுக்கு முன் பர்மாவிற்குள் சென்று தன்னுடைய அலுவல்களை முடித்துக்கொண்டு வெற்றிகரமாகத் திரும்பி வந்திருக்கும் பிரிடிஷ், இந்தியா, கூர்கா, பர்மாத் துருப்புகளைப்பற்றியும் வியாக்யானம் எழுத வேண்டியது அவசியமாகும். இதற்கு திட்டம் போட்டது பீல்ட் மார்ஷெல் வேவல். இதை நடத்தியது பிரிகெடியர் வின் கெட். இம்பாலிலிருந்து இவர்கள் புறப்பட்டபொழுது வழக்கத்துக்கு மாறாக, இவர்கள் செய்யப் புறப்படும் அரிய சேவையைப் பாராட்டி வேவல் இவர்களுக்கு முதலில் தான் வந்தனோபசாரம் செய்து விசேஷ கௌரவம் அளித்தார். கிழக்கு முகமாகச் சென்று சிண்ட்வின் நதியைக்கடந்து, 750 மைல்கள் சென்று மாண்டலேயிலிருந்து மிட்கினாவுக்குப் போகும் இருப்புப்பாதையை இவர்கள் 75 இடங்களில் துண்டித்துவிட்டார்கள். வெயர்லஸ் மூலமாக, தகவல்களும், விமான மூலமாக உணவுப் பொருள்களும் இவர்களுக்குக் கிடைத்தன. உணவுப் பொருள்கள் குடைகள் மூலமாகப் போடப்பட்டன. விமானங்களால் உணவுப் பொருள்கள் உள்ள குடைகள் கொண்டு வரப்பட்டு முக்கியமான இடங்களில் தள்ளப்பட்டன. சில சமயங்களில் விமானங்கள் கீழே இறங்கின. காயம்பட்டவர்களை அவைகள் தூக்கிச்சென்றன.

இந்த நிகழ்ச்சியிலிருந்து காட்டுப் பிரதேசத்தில் சண்டை போடுவதில் தரைப்படையும், விமானப்படையும் எவ்விதம் ஒத்துழைக்கக்கூடுமென்று வெளியாகிவிட்டது. இதன் விளைவாக மிட்கினுவுக்கு வடக்கேயுள்ள காகின் துருப்புகளைத் தாங்குவதை ஜப்பானியர்கள் ஒத்தி வைக்கும்படி நேர்ந்தது.

வி வி வி வி வி

**ஸித்தி மனேப் பாஷா பட்டம் துறந்தார்.** ஸித்திமனேப்பாஷா பட்டம் துறந்ததும், அவரும் அவருடைய குடும்பத்தாரும் மடகாஸ்கருக்குச் சென்றதும் ஆச்சரியமில்லை. டூனிஸியா யுத்த ஆரம்பத்தில் அவர் நேச நாடுகளுக்கு ஒத்தாசை செய்து வந்தார். சமீப காலத்தில் அவர் ஜெர்மானியர்களின் கையாளாக ஆகிவிட்டார். அவருக்கு நல்ல தண்டனை கிடைத்தது. குயிஸ்லிங்குகளை விட அதிகமான சிக்ஷை அவருக்கு பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**புதுக்கோட்டையில் யுத்த நடவடிக்கைகள்.** உத்தரவன்னியில் பஞ்சு நூல்களை, ஏற்றுமதி செய்யவும், விற்பனை செய்யவும் கூடாதென்று புதுக்கோட்டை அரசாங்கத்தார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். நூல் நூற்கும் யந்திரசாலைகள் ஒவ்வொரு மாதமும் கணக்குகள் அனுப்பவேண்டும். நெல் அரைக்கும் யந்திரசாலைகள் இரண்டு வாரத்துக்கொருதரம் தங்களிடமுள்ள அரிசி, தான்யம் இவைகளின் சேமிப்புக் கணக்கைச் சமர்ப்பிக்கவேண்டும்.

தங்களுடைய ஜாகாவிலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பப்படும் உணவுப்பொருள்கள் அல்லது மற்ற சாமான்களைத் தவிர மற்ற சாமான்களைக் கட்டுவதற்கோ அல்லது பார்ஸல் செய்வதற்கோ பழைய சமாச்சாரப் பத்திரிகைகளைத் தவிர வேறு விதமான காகிதங்களை உபயோகிக்கக் கூடாதென்று சில்லரை வியாபாரிகளும் மற்றொரு உத்தரவின்படி தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

---

# க்ஷேமத்துக்கு அடிப்படைகள்.

## ஜனங்களின் சமாதானத்திற்காக சர்வ ஜனங்களும் நடத்தும் யுத்தம்.

(ஸர் வில்லியம் பெவரிஜ்) அப்ஸர்வர் பத்திரிகை.

1942-ம் வருஷத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்களில் யுத்தம் முடிவடைந்த பிறகு புதிதாக அமைக்கப்படும் பிரிட்டனைப்பற்றி பிரிடிஷ் மக்கள் காட்டிவரும் ஆழ்ந்த தெளிவான அக்கரையும் ஒன்று. யுத்தத்துக்குப்பின் நடைபெறவேண்டிய பிரச்னைகளை கவனிப்பதிலிருந்து யுத்த முயற்சி குறைவுபட்டதென்பதில்லை. ஒரு வருஷத்தில் யுத்த முயற்சி சாவதானமாக அதிகரித்துவிட்டதென்றும் சோர்வடையாமல் உன்னதியை அடைந்துவிட்டதென்றும் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. வெற்றிக்காகத் தேவையான எவ்வித தியாகங்களையும் செய்வதிலும் ஜனங்கள் பின்வாங்கவில்லை. யுத்தத்தில் வெற்றி பெற்றால் மட்டும் போதுமென்ற அபிப்பிராயத்தை ஜனங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. வெற்றி கிடைத்தபின் நமது லக்ஷியமென்ன என்பதை அறியவும் ஆமோதனம் செய்யவும்தான் இப்பொழுது முயற்சிகள் செய்யப்படுகின்றன. நமக்கு கிடைக்கும் வெற்றியை எவ்விதம் பிரயோஜனப்படுத்துவதென்பதிலும் நாம் அக்கரைகொண்டிருக்கிறோம்.

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தேசங்களின் தலைவர்கள், ஒவ்வொரு நாளும் அவ்வப்பொழுது ஏற்படும் அவசர பிரச்னைகளைக் கவனிக்கவேண்டும். எதிரியின் எதிர்ப்பு முறைகளை மதித்துப் பார்க்கவேண்டும். அவனுடைய யுத்தப்போக்குகளை முன்கூடி அறியவேண்டும். ஆகையால் யுத்தத்தில் வெற்றிபெற்றால் போதுமென்று அவர்கள் நினைக்கலாம். எதிரியின் தலைவர்களுக்கு அவர்கள் நிபந்தனைகளை விதிப்பதோடு அவர்கள் அலுவல்கள் முடிந்துவிட்டதென்றும் நினைக்கலாம். இதற்கப்புறம் நடைபெறப்போகும் காரியங்களினின்றும் தற்போதிய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் வரக்கூடாதென்றும் அவர்கள் அபிப்பிராயப்படலாம்.

## வெற்றிக்குப் பின்.

பால்யம் முதற்கொண்டு கொடுங்கோல் அரசனின் கீழும், அல்லது பைத்தியம் பிடித்தவனின் கீழும், பயிற்சிபெற்றவர்களும், யுத்தம் நடைபெறும் முன்னால் அநேக வருஷங்களாக யுத்தக்கொடுமைகளை அனுபவித்தவர்களுமான யதேச்சாதிகார நாடுகளிலுள்ள பொதுமக்கள் தங்களுடைய வருங்காலப் போக்கைப்பற்றி சிந்திக்கமாட்டார்கள். அல்லது விதிப்படி நடைபெறுமென்று சும்மா இருந்துவிடுவார்கள். அவர்களுக்கு வெற்றியோ அல்லது யுத்தத்திலிருந்து தப்பித்துக்கொள்ளுவதோதான் முக்கியமான லக்ஷியமாகும். சமாதான நிலையிலிருந்துவந்த ஜனநாயக நாடுகளின் ஜனங்களின் மனப்பான்மை வேறுபட்டது. பிறர்களை ஆளவேண்டுமென்ற அபிப்பிராயத்துடன் வாலிபப்பருவத்தில் உயிரை மாய்த்துக் கொள்ளுவதற்கோ அல்லது மற்றவர்களைக் கொலை செய்வதற்கோ சரியான ஞாயமில்லையென்று அவர்கள் நினைக்கிறார்கள். எல்லா ஜனங்களைப்போலவும் தங்களுடைய தாய் நாட்டை தற்காப்புச் செய்வதில் சாகும்வரையில் யுத்தம் செய்துதான் தீருவார்கள். அயல் நாடுகளில் நடைபெறும் கொடுமைகளைக்கண்டு அவர்களுக்கு ஞாயமான கோபம் உண்டாகக்கூடும். இதேமாதிரி பிரிடிஷார்களுக்கு அடிக்கடி கோபம் உண்டாகியிருக்கிறது. முதல் உலக யுத்தத்தில் அமெரிக்க ஜனங்களுக்கும் இவ்விதமான கோபம் ஏற்பட்டது. ஆகிலும் நினைத்த காரியம் முடிவடையும் வரையில் இந்தக் கோபம் நிலைநிற்காது. உலகத்தில் ஒவ்வொரு பாகத்திலுமுள்ள கொடுமை வல்லரசுகள் ஒழியவேண்டியதற்கு லாயக்குள்ளவர்களைத் தயாரித்து அனுப்புவதற்கு இப்போது உள்ள ஜனநாயக நாடுகள் இடைவிடாது முயற்சி செய்யவேண்டுமானால் கோபமும், பீதியும் வெறுப்பும் இதை நடத்திவிட முடியாது. யுத்தத்துக்குப்பின் நமக்குள்ள லக்ஷியமும், சர்வதேச மக்களும் அவர்கள் சந்ததியார்களும் சந்தோஷமாக வாழ்ந்து ஒத்துழைக்கும்படி ஒரு புதிய உலகத்தை அமைப்பதும்தான். இதை நடைபெறச் செய்யக்கூடும்.

யதேச்சாதிகாரிகள் உள்ள ராஜ்யங்கள் போல ஜனநாயக ஆட்சியிலுள்ள ஜனங்களும் தலைவர்களைப் பெற்றிருக்கவேண்டும். யதேச்சாதிகார நாடுகளுக்கும் ஜனநாயக நாடுகளுக்குமுள்ள வித்யாசம்யாதெனில், ஜனநாயகத்தில் தலைவர்களைக் கொலை செய்யாமல் அடிக்கடி மாற்றிவிட சக்தியுண்டு. நிர்வாகத்தை சமாதான முறையில் மாற்றக்கூடிய சக்தியிருப்பதுதான் ஜனநாயகத்தின் முக்கியமான அம்சம். இந்த உரிமையைத் தப்பாக உபயோகித்து அடிக்கடியோ அல்லது ஸாரமற்ற காரணங்களுக்காகவோ அரசாங்கத்தலைவர்களை மாற்றுவதிலிருந்து சமாதான காலத்திலும், யுத்த காலத்திலும் அரசாங்கத்துக்கு பலஹீனம் ஏற்பட்டுவிடும். ஆகிலும் மாறுதல்கள் ஏற்படாமலிருக்கவேண்டுமானால் தலைவர்களுக்கும் ஜனங்களுக்குமிடையே பரஸ்பர நல்லறிவும் நம்பிக்கையும் நிலைபெறவேண்டும். யுத்தத்தில் தேசமக்களின் ஒற்றுமை என்பதும் இதுதான்.

தேசிய ஒற்றுமை என்பது தனிப்பட்ட கக்ஷிக்காரர்கள் பேரம் செய்வதுமில்லை, அல்லது சர்வ கக்ஷிகளும் ஒன்றுபடுவதுமில்லை. அரசாங்கத்தாருக்கும் ஜனங்களுக்கும் பரஸ்பர நல்லறிவு ஏற்படுவதிலிருந்துதான் தேசிய ஒற்றுமை உண்டாகும். இந்த நுண்ணறிவில் முக்கியமான அம்சம் யாதெனில் நிர்வாகம் செய்கிறவர்கள், நாம் மேலே சொல்லிய 1942-ம் வருஷத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதிய கொள்கையை ஆமோதிக்கவேண்டும். அதாவது பிரிடிஷ் ஜனநாயகமானது வெற்றிக்குப்பின் வெற்றியை எவ்விதம் உபயோகிப்பது என்பதை இப்பொழுதே நிர்த்தாரணம் செய்வதுதான். இதை மதிக்கவேண்டுமானால், யுத்தமானது பொது ஜனங்களை எவ்விதம் பாதிக்கிறதென்றும் அரசாங்க நிர்வாகத்தை நடத்திவரும் அங்கத்தினரை அது எவ்விதம் பாதிக்கிறதென்றும் முதலில் அறிந்துகொள்ள வேண்டும்.

யுத்தத்தில் பொதுப்படையான விளைவுயாதெனில் பொதுமக்கள் விசேஷமாக முக்கியஸ்தர்களாகிறார்கள். யுத்தகாலத்தில், மனித பலம், யந்திரங்கள், தளவாடங்கள் இவைபோன்ற ஐசுவர்யங்களைவிட அதிகமான தேவைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் ஐசுவர்யங்களைக் கொஞ்சமேனும் வீணாக்குவதென்பது குற்றம் செய்ததாகும். ஆகையால் நாட்டிலுள்ள திடசரீரமுள்ள ஒவ்வொருவரும் முக்கியமானவராகயிருக்கிறார்கள். எல்லா மனிதர்களும் யுத்த முயற்சிகளில் ஈடுபடலாம், சேவை புரியலாம். வேலையில்லாத் திண்டாட்டத்தின் கஷ்டங்களும் ஏமாற்றங்களும் மறைந்துவிடுகின்றன. இந்த விளைவுகளுக்குக் காரணம், யுத்தகாலத்தின் அவசியங்களை, தலைவர்களும் பொதுமக்களும் நன்கு உணர்ந்துவிட்டார்கள். இருதரப்பாரின் பூர்ண சம்மதத்தின் பேரில் அரசாங்கத்தின் சக்தி பயன்பட்டு யுத்த முயற்சிகளில் உபயோகப்படுத்தப்படுகிறது.

## அளவற்ற தேவைகள்.

யுத்தத்துக்கு வேண்டிய தேவைகள் அவசரமானவையென்றாலும் சமாதான முறையில் அவசியமான தேவைகளைவிட மகத்தானவையல்ல. யுத்த அவசியங்களைப்போலவே சமாதானகாலத் தேவைகளும் அளவற்றவைகள். தேகசம்பந்தமானத் தேவைகள் இனிமேல் அவசியமில்லையென்று அவைகளை ஒரு தேசமானமானது நிராகரிக்கும்பொழுதும், அதற்குப் பின் எல்லா ஜனங்களுக்கும் தொழில் முறைகளையும், சௌகரியங்களையும், இகலோக சுகபோகங்களையும் ஏற்பாடுசெய்யவேண்டுமானால், எல்லாத் தேவைகளையும் பூர்த்திசெய்ய முடியாது. புதியதேவைகளும் கல்வியின் பயனாக உண்டாகிவிடும், போது போக்கு வசதிகள் வியாப்பியாசம், சுற்றுப்பிரயாணம் முதலிய போகங்களையும் அமைக்கவேண்டும். ஆகிலும் இந்த நிலையை நாம் இப்பொழுது அடையவில்லை.

இப்பொழுது ஜீவித்துவரும் ஜனங்களின் நிலைமையை கவனித்தால் அநேகர்கள் தங்களுடையு இச்சைகளை அடையமுடியவில்லையென்று அதிருப்தியடைந்திருக்கிறார்களென்று செல்லவேண்டியிருக்கிறது. யுத்த அவசியத்தைபோல அவர்களுடைய தேவைகளும் முக்கியமானவை என்று அவர்கள் நினைக்கிறார்கள். இங்கேயும் நிர்வாகிகளுக்கும் பொது ஜனங்களுக்குமுள்ள வித்தியாசத்தை நாம் கவனிக்கவேண்டும். நிர்வாகத்திலுள்ளவர்களுக்கு யுத்த அவசியங்கள்தான் முக்கியமானவையென்று தோன்றும். ஏனென்றால் அவர்கள் சம்பந்தப்பட்டமட்டில் சமாதான அவசியங்கள் பரிபூர்ணமாகயிருக்கின்றன. ஆகையால் அவர்களுடைய அனுபவத்திலிருந்து, சமாதானகாலத்திலும் தேவைகளுண்டென்றும், ஐசுவர்யங்களை வீணாக்காமல் உபயோகப்படுத்த வேண்டுமென்றும் அவர்கள் சுலபமாகக் கண்டுபிடிக்கமுடியாது. சமாதானகாலத்திலிருந்த மாதிரியாகவே அவர்கள் யுத்தகாலத்திலும் தங்களுடைய அலுவல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். மந்திரிகளாகவும், பார்லிமெண்டு மெம்பர்களாகவும், கக்ஷிகளையும், வியாபாரச் சங்கங்களையும் ஏற்படுத்துபவர்களாகவும், பொதுஜன வாழ்கையின் நிர்வாகத்தில் ஈடுபட்டவர்களாகவும் அல்லது தொழில் நடத்துகிறவர்களாகவும் அவர்கள் இருந்து வந்தார்கள். யுத்தமானது அவர்களை அவ்வளவாக பாதிக்கவில்லை. மிலியன் கணக்கான பொது ஜனங்கள்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொழில் முறைகள் திடீரென்று மாறிவிட்டன. யுத்தம் முடிவடைந்தவுடன் மற்றொரு பலமான மாறுதலும் ஏற்படக்கூடும்.

## வெற்றிக்கு வழி.

மனிதர்களின் முயற்சிகளிலும் மனிதர்களின் தொழில் முறைகளிலும் விபரீதமான மாறுதல்களை உண்டாக்கியிருக்கும் யுத்த நிலைமையில் அரசாங்கத்தாரின் லக்ஷியமும் அலுவல்களும் மாறுதல்கள் அடையவேண்டும். விலைவாசிகளை ஒத்து பொருளாதார நிலை சரிபட்டுவிடுமென்பது வேகமாக மாறுதலடைந்துவரும் காலத்தில் சாவதானமாகத்தான் நடைபெறும். அரசாங்கம் தலையிட்டுத்தான் இதை சரிப்படுத்தவேண்டும். முன் கூடியே நிறுவப்பட்ட திட்டங்களை ஒத்துத்தான் வேகமாகவும் நன்றாகவும் பொருளாதார முறைகள் சரிவர நடைபெறும். சமாதான முறையிலிருந்துயுத்த முறைக்கு மாறும் சமயத்தில் இம்மாதிரியான திட்டங்கள் அவசியமாகும். அதேவிதமாக யுத்த முறையிலிருந்து சமாதான முறைக்கு மாறும்பொழுதும் முன்கூடியே திட்டங்களை நிறுவவேண்டுமென்பதும் அவசியம்.

சமாதான காலத்திலேயே யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் யுத்தத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட வேண்டுமென்று நினைப்பது ஒரு தத்வமாகும். இப்போதிருக்கும் ஜனநாயக நாடுகள் போதுமான யுத்த முயற்சிகளைச் செய்யாததற்கு ராஜீய முட்டுக்கட்டைதான் காரணமாகும். அதாவது அவர்களின் அமைதியான ஸ்வபாவம்தான். அதுபோலவே யுத்த முறைகளிலிருந்து சமாதான முறைகளுக்கு சாவதானமாகச் செல்ல வேண்டுமானால் முன்கூடியே போதுமான ஏற்பாடுகளும் செய்தாகவேண்டும். யுத்தம் நடைபெறும்பொழுதே சமாதான திட்டங்கள் போடவேண்டும். இது விஷயத்தில் ஒரு ராஜீய முட்டுக்கட்டையுமில்லை. யுத்தகாலத்திலேயே சமாதான காலத்துக்கு திட்டம் போடுவதென்பது ஜனநாயகத்தின் கொள்கைகளுக்கு ஒத்ததாகும். ஜனங்களின் தலைவர்கள் செய்யவேண்டிய அலுவல்களில் இதுவும் ஒன்றாகும்.

கொள்கைகளிலும், நடவடிக்கைகளிலும் இந்த அம்சத்தை அரசாங்கம் பூராவாக மதித்துப்பார்த்தால்தான், யுத்த காலத்தில் ஜனங்களின் ஒற்றுமை நிலவும். யுத்தத்திற்கு அதின் மூலமாக அதிக ஆதரவு கிடைக்கும். தலைவர்களும் ஜனங்களுக்குமிடையே பரஸ்பர

நல்லுணர்ச்சி பூர்ணமாக உண்டானால்தான் இந்த ஆபத்து காலத்தில் தேவையான திடமான ஆதரவும் சோர்வடையாத யுத்த முயற்சியும் ஏற்படும். யுத்தத்தில் ஈடுபட்ட ஜனநாயக நாடுகளின் தலைவர்கள் வெற்றியின் பிரயோஜனத்தைப்பற்றியும் வெற்றிக்குவேண்டிய உபாயங்களைத் தேடுவதிலும் கவலையெடுத்துக் கொள்ளுவதென்பது முக்கியமான லக்ஷியத்தைவிட்டு அனுவசியமான லக்ஷியத்தில் கவனம் செலுத்துவதென்று அர்த்தமில்லை. வெற்றிக்கு வேண்டிய உபாயங்களைத் தேடுவதும் அவர்களுடைய அலுவலாகும். நமது எரிதிகள்போல் வலிமையும் முஸ்தீப்பும் உள்ள ஒரு எதிரியை முறியடிக்கவேண்டுமானால் யுத்தத்தில் சர்வ ஜனங்களும் ஈடுபடவேண்டும். சர்வஜனங்களும் யுத்தம் நடத்தவேண்டுமானால் சர்வஜனங்களின் சமாதானத்துக்குவேண்டிய ஏற்பாடுகளையும் நிறுவத்தான் வேண்டும்.

---

# இதாலியின் துர்தசை.

## இதாலிய ஆபீஸர் முஸோலினியை தூஷிக்கிறார்.

**(டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை, மேமீ 15, 1943).**

இதாலியின் தற்காலத்திய துர்தசையை விளக்கிக்காட்டக்கூடியதும் அதற்குக் காரணங்களை விமர்சனம் செய்கிறதுமான ஒரு கட்டுரையானது மேமீ 1-ம் தேதி வெளியான டைம்ஸ் எக்ஸாமினர் என்னும் பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டுரையை எழுதியவர் கர்னல் வில்லா என்னும் இதாலிய் ஆபீஸர். அவர் இந்தியாவில் யுத்தக்கைதியாகயிருக்கிறார். அதிலிருந்து சில குறிப்புகளை இங்கு வெளியிடுகிறோம்.

கர்னல் வில்லா சென்ற வருஷத்தின் முடிவில் யுத்த நிலையைப்பற்றி விமர்சனம் செய்வதுடன் ஆரம்பித்து முடிவில் எழுதுகிறார். "1942-ம் வருஷம் முடிவில் துரோகத்தினாலும் அநேக வருஷங்களாக சிலாக்கியமாகத் தயாரிப்புகள் செய்ததினாலும் அவர்களுக்குக் கிடைத்த லாபங்களை ஜெர்மானியரும் ஜப்பானியரும் இழந்து விட்டார்கள். சண்டையிலீடுபட்ட நாடுகளின் ஆயுத பலம் சமமாய் இப்பொழுது இருக்கிறது. நேசதேசத்தாரின் பலம் வரவர விசேஷமாக அதிகரித்துவிடும்."

இதாலி யுத்தத்தில் புகுந்தேயிருக்கக்கூடாது. அதுவும் ஜெர்மனி, ஜப்பானிருக்கும் கக்ஷியில் கலந்துகொண்டிருக்கக்கூடாது. இதாலியானது 50 வருஷங்கள் சமாதானத்துடனிருக்கவேண்டுமென்றும் சீர்திருத்தம் பெறவேண்டுமென்றும் முஸோலினி அடிக்கடி சொல்லுவதுண்டு. நாட்டுப் புறங்களுக்கு அவன் அடிக்கடி செல்லும்பொழுது "இவ்விதமான சண்டைதான் நமக்குத்தேவை"—அதாவது முட்டாள்தனமான சாம்ராஜ்யக் கொள்கையுள்ள யுத்தமில்லை—வயல்களிலும், ஆபீஸ்களிலும் வேலை செய்வதுதான் என்றும் அவன் பேசியிருக்கிறான்."

### பாத்தியங்கள் ரத்து.

பிரான்ஸிடமிருந்து தேசங்களைக் கைப்பற்றவேண்டிய எண்ணம்கொண்டு இதாலி யுத்தத்தில் தலையிட்டதென்று சொல்லும் காரணமும் நியாயமற்றது. 1935-ம் வருஷத்தில், கார்ஸிகா தீவிலும், நைஸ் என்னுமிடத்திலும் பழைய திட்டப்படி 1950-ம் வருஷத்தில் சர்வ ஸ்வதந்திரங்களும் எடுபட்டுப் போகக்கூடிய டூனிஸியாவிலும் இதாலிக்குள்ள பாத்தியங்களை ரத்துசெய்து முஸோலினி லவாலுடன் ஒப்பந்தம் செய்துகொண்டான். சர்வதேச சங்கத்தில் கொடுக்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் இரண்டு நாடுகளுக்குமிடையே வளர்ச்சி பெற்ற சச்சரவுகளும் சங்கடங்களும், இருவரும் சாந்தி அடைந்த பிறகு சமாதான முறையிலே தீர்ந்துவிட்டிருக்கலாம். இதாலிய சாம்ராஜ்யத்துக்குப் போகும் மார்க்கத்தையும், ஸூயஸ் கால்வாய் வழியையும், ஜிபூட்டி துறைமுகத்தின் உபயோகத்தையும் சமாதான முறையிலேயே சாதகமாகத் தீர்த்துக்கொண்டிருக்கலாம். இங்கிலாந்து உருவான, சாதகமான திட்டங்களை இதாலிக்கு விடுத்தது. கடைசியாகவும் 1940-ம் வருஷத்தில் இதாலி நடுநிலைமை வகிக்கவேணுமென்றும் அது வற்புறுத்தியது.

இதாலிய ஜனங்களும் யுத்தத்தில் ஈடுபட பிரியப்படவில்லை. 1938-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் மூனிச்சிலிருந்து முஸோலினி திரும்பி வந்தபொழுது "சமாதானத்தை நிலைநாட்டி வந்தான்" என்று கூறி ஜனங்கள் முஸோலினியை வரவேற்றதிலிருந்து இந்த மனப்பான்மை வெளியாகுகிறது. 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் ஆரம்பத்தில், யுத்த ஆரம்பத்திலேயே இதாலி ஜெர்மனி பக்கத்தில் சேர்ந்து கொள்ளவேண்டுமென்று சொன்னபொழுது இதாலியில் ஏற்பட்ட கவலையும், பிறகு 1942-ம் வருஷத்துக்கு முன்னதாக இதாலி யுத்தத்தில் ஈடுபடவேண்டுமென்ற வாக்குறுதி சம்பாவிதமுமில்லை என்ற

பொழுது ஜனங்கள் வெளிக்காட்டிய ஆச்வாசத்திலிருந்தும் இது மேலும் ஸ்பஷ்டமாயிற்று. மூன்ருவது தடவையாக, 1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில் கட்டாய சேமிப்புச் சேனைகள் நகரத்தின் தெருக்கள் வழியாகச் சென்றபொழுது ஜனங்கள் வறவேற்காமலும், பொது ஜனங்களிடம் இது விஷயத்தில் ஏற்பட்ட உற்சாகமின்மையையும் இதை ருஜுப்படுத்துகிறது.

### பிரான்ஸைக் கபடமாக அடித்தது.

தோல்வியுற்ற பிரான்ஸைத் தாக்கியதும், அகாரணமாக கிரீஸைத் தாக்கியதும், அக்கிரமச்செய்கைகள். இவைகள் மன்னிக்கக்கூடியவைகளல்ல. தன்னுடைய பெருமையையும், கௌரவத்தையும் இழந்துவிடாமல் ஒரு தேசம் யுத்தத்தில் தோல்வி பெறலாம். இதாலிய சரித்திரத்தில் ஆயிரம் ஆண்டுகளில் படையெடுப்புகளும், வெற்றிகளும், தோல்விகளும், அழிவும் ஏராளமாகயிருந்திருக்கின்றன. மாகாணங்கள், நகரங்கள், கோட்டைகள் இவைகளைப் பிடிப்பதற்காகச் செய்த போர்களில் இதாலி அழிவுபட்டது. மற்ற தேசங்கள் போலவே இதாலியின் சரித்திரம் சுகமாகவும், பிரயோஜனமுள்ளதாகவும் புகழ்பெற்றதாகவும் சதா காலமும் இருந்துவரவில்லை. ஆகிலும் மற்ற எந்தக் காலத்திலும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் அவமதிப்பும் சீர்கேடுமிருந்ததில்லை. மற்றவர்கள் விழுக்காட்டின ஒரு தேசத்தை மறுபடியும் தாக்குவதென்பதும் 40 மிலியன் கொண்ட ஜனங்கள் 7 மிலியன் ஜனங்களுள்ள கிரீஸ் தேசத்தைத்தாக்கி, அது தனக்குவேண்டிய தற்காப்பைச் செய்துவரும் பொழுது துரோக சிந்தனையுள்ளதென்று குற்றம் சாட்டுவதும், இதைத் தவிர அலக்ஷியமாக யுத்தம் செய்து நம்முடைய துருப்புகளுக்கு அவமதிப்பும் ஆல்பேனியாவிலிருந்து பின் வாங்கி ஓடவேண்டிய நிலைமையை உண்டுபண்ணியதும் வெட்ககரமான நிகழ்ச்சிகள். லிபியாவிலும், அபிஸீனியாவிலும், துருப்புகளை எப்படி நடத்துவது, உபயோகப்படுத்துவது என்று தெரிந்துகொள்ளாமல் இரண்டு சேனைகளை பலிகொடுத்து விட்டோம். சாம்ராஜயம் ஏற்பட்ட ஐந்து வருஷங்களுக்குள்ளாகவே அதை நாம் இழந்துவிட்டோம். இதைத் தவிர 50 வருஷங்களாக நமது முன்னோர்கள் சம்பாதித்த எல்லாவற்றையும் நாம் இழந்து விட்டோம். நம்முடைய ராணுவ வலிமையைப்பற்றி நான்கு திக்குகளிலும் பறைசாற்றினோம். நமது ஜனங்களையும், நமது நகரங்களையும், நமது தொழிற்சாலைகளையும் காப்பாற்ற வழியன்னியில் எதிரிகளின் விமானங்களும், கடற்படையும் செய்துவரும் தாக்குதல்களைப் பொருத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. உலகம் பூராவிலும் இதாலியின் பெயர் கெட்டுவிட்டது. எல்லா இடங்களிலும் நமக்கு விரோதிகள் கிளம்பிவிட்டார்கள்.

இந்த அவமானங்களை எல்லாம் கண்டு இதாலியர்களின் மனம் நொந்துவிட்டது. நமது தேசத்தின் கௌரவத்தையும், தீரத்தையும் பாராட்டி வரும் இதாலிய மக்கள் வெட்கப்பட்டுத் தலை குனியும்படியாகவும் ஆகிவிட்டது. எல்லோரும் தவறுதல்கள் செய்வதுண்டு. பிரிடிஷ் அமெரிக்கத் தலைவர்கள் தங்கள் தவறுதல்களைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுகிருர்கள். இன்னும் அநேக தவறுதல்களைச் செய்வோமென்றும் ஒப்புக்கொள்ள அவர்கள் பயப்படுகிறதில்லை. அச்சுநாட்டுத் தலைவர்களோவென்ருல் தாங்கள் ஒருபொழுதும் தவறுதல் செய்யமாட்டோமென்று மார்தட்டிக்கொள்ளுகிருர்கள்.

### சங்கடம்.

நவம்பர் மாதம் 29-ம் தேதியன்று இதாலிக்கு ஏற்பட்ட மகத்தான சங்கடத்தைப்பற்றி மிஸ்ட்டர் சர்ச்சில் சொற்பொழிவு செய்தார். இதாலியின் தென்பாகம் பூராவும், அதன் கடற்தளங்களும், வெடிமருந்து சாலைகளும், மற்ற ராணுவ முக்கியத்வம் வாய்ந்த லக்ஷியங்களும், எங்கே யிருந்தாலும், சாஸ்திர முறையில் விமானப்படையின் தாக்குதல்களுக்குட் பட்டுவிடும். இது நடைபெற வேண்டுமா அல்லது வேண்டாமா என்று தீர்மானம் செய்வது 40 மிலியன் இதாலியர்கள் கையில்தானிருக்கிறது. ஆகிலும் சங்கடத்திலிருந்து தப்பிவிட வழியிருக்கிறது. நகரங்கள், ஜனங்கள், தொழிற்சாலைகள், துறைமுகங்கள், கப்பல்களின் நஷ்டம் சிலாக்கியமா அல்லது கொடுமையாலும் அடக்கு முறையாலும் ஏற்படும் கஷ்டங்கள் சிலாக்கியமா என்பதை அது நிர்ணயிக்கவேண்டும். இந்த யுத்தத்தின் லக்ஷியமென்ன, ஆயுதங்களைப் போட்டுவிட்டால் இதாலிக்கு என்ன கதி ஏற்படும், இதாலியின் வருங்கால கதியென்ன என்ற விஷயங்களெல்லாம் இன்னும் புலப்படவில்லை. வருங்காலத்தில் உலகம் எப்படியிருக்கும், இதாலியர்களின் ஸ்திதி என்ன, வரப்போகும் புது உலகத்தில் இதாலிக்கு எவ்வளவு ஐச்வர்யமும், எவ்வளவு பூப்பிரதேசமும் கிடைக்கும் என்ற விஷயத்தைப்பற்றி நேசதேசங்கள் இதாலிக்குத் தெளிவுற விளக்கவேண்டும்.

ஐக்கிய தேசத்தார்களின் ராணுவ, ஸிவில் தலைவர்களெல்லாம் கூடிய சீக்கிரத்தில் இதாலி சம்பந்தமாக ஒரு நிகழ்ச்சிக் குறிப்பை வெளியிடவேண்டும். இந்தத் திட்டம் கடுமை

யாகவும், இழிவாகவுமிருக்கக்கூடாது. தாராளமானதும், பெருந்தன்மையுள்ளதும், நீண்ட நோக்கமுள்ளதுமாகயிருக்கவேண்டும். மறைபொருளாகவும் சந்தேகாஸ்பதமாகவுமிருக்கக் கூடாது. உருவானதாகவும், ஸ்பஷ்டமாக எழுதப்பட்டதாகவுமிருக்கவேண்டும். நித்திய சந்தேகிகளும் ஒப்புக்கொள்ளும்படியாகவும், சாதாரண மனிதர்களுக்கும் அறிமுகமாகும்படி யாகவும் எழுதப்படவேண்டும். அப்பொழுதுதான் இதாலி ஒரு முடிவுக்கு வர முடியும். இது குருட்டுத்தனமாக உயிரைக் காப்பாற்றவேண்டியதற்காகச் செய்த முடிவாகாது. ஏற்கனவே மனக் கொதிப்பும் சிற்சில நடவடிக்கைகளும், கிளம்பிவிட்டன. ஆகிலும் அவைகள் ஒன்றுபட்ட முறையிலும் உருவாகவும் நடைபெறவில்லை. கலவரங்கள் வலுவடைந்து வரு கின்றனவென்பதில் சந்தேகமில்லை. அயல் நாட்டிலுள்ள (முக்கியமாக அமெரிக்காவில்) இதாலியர்களின் நடவடிக்கைகளும், யுத்தக் கைதிகளின் கிளர்ச்சிகளும், இதாலியப் பொது உடமைக் கக்ஷியாரின் பிரசுரங்களும், மற்ற ஜனங்களின் முயற்சிகளும், ஸெனடர்கள், ராணுவ அதிகாரிகளின் புரட்சிகளும், எல்லாம் சேர்ந்து பொதுவான கிளர்ச்சிக்கு அஸ்திவாரமாக யிருக்கவேண்டும். அவர்களுடைய லக்ஷியமும், ஸ்பஷ்டமாகயிருக்கவேண்டும்.

**உண்மை உரைப்பது அவசியம்.**

இந்தக் கட்டுரையை எழுதிய காரணங்களைச் சொல்லிவிட்டு கர்னல் வில்லா முடிவுரை எழுதுகிறார். இதாலிய மக்களில் ஒருவனாகவும், இதாலிய சிப்பாயாகவும் தன்னுடைய அலுவல்களைச் செய்தானென்பதில் மட்டும் பெருமை பாராட்டிய ஒரு இதாலியன் இதாலிய மக்களுக்கு உண்மையை பகிரங்கமாக உரைக்கவேண்டியது அவசியம். தன்னுடைய அலுவல் களைச் செய்து முடிப்பதில் தியாகத்தைப்பற்றியும் சுயநலத்தைப்பற்றியும் கர்னல் வில்லா கவலைப்படுவதில்லை. மறைமுகமாக இருந்து சொல்லாமல் பகிரங்கமாக விஷயங்களை வெளி யிடுவதும் அவசியமேயாகும். ஏனென்றால் இதாலியனாகயிருக்கும் ஒவ்வொருவரும் தன்னுடைய பொறுப்பை எவ்விதம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் தெரிந்துகொள்ள வேண்டியதும் முக்கியம்.

---

# ஆக்கிரமிப்பு நாடுகளில் ஜப்பானின் நடவடிக்கை.

(**பீடர் ஹூம்**, ஆசியா ரிவ்யூ, ஜனவரி 1943).

மஞ்சூரியாவில் நடந்த அக்ரமங்களெல்லாம் தூரக்கிழக்கு நாடுகளில் ஜப்பான் ஆக்கிர மித்த இடங்களிலும் நடைபெறுகின்றன. தூரக்கிழக்கு நாடுகளில் சமாதானம் நிறுவுவதற்கும் வெள்ளையர்களின் ஆதிக்கத்திலிருந்து ஆசியா மக்களை விடுவிப்பதற்கும் ஜபபானியர்கள் முன்வந்தார்கள் என்ற வீண்பேச்சுகளை சில நாடுகள் நம்புகின்றன. இதேவிதமாக மேற்கி லுள்ள ஜனங்களும் நம்பினார்கள். பிரசாரத்தில் ஊறிய ஜப்பானியர்கள் இந்தக் காரியங்கள் நடைபெறுவதாகவும் நம்புகிறார்கள். இந்த ஆபாசமான தோற்றத்தில் தாராளப் பான்மை யும், சீர்திருத்தமும், நியாயமும் சேர்ந்த ஒரு மாயை சூழ்ந்திருக்கிறது. தெளிவு காலப் போக்கில்தான் உண்டாகும்.

மலேயாவில் இதே மாதிரிதான் நடைபெறுகிறது. செழிப்பான ஒரு பிரதேசத்தைப் பிடித்துக்கொண்டு ஜனங்களுக்கு ரஞ்சகமான சொற்களைக் கிளிகள்போலச் சொல்லி வந்தார்கள். "ஆசியா ஆசியா கண்டத்திலுள்ளவர்களுக்குத்தான்". இது நியாயம்தானே. சாதாரணமான மலாய்நாட்டு மனிதன் இந்தப் பதங்களின் உண்மையைச் சர்ச்சைசெய்து, பிரிடிஷ் அரசாங்க முறைகளால் தனக்கு ஏற்பட்டிருக்கும் உயர்வான வாழ்க்கைக்கு அபாயம் வந்துவிட்டதென்று அவன் கண்டுபிடிக்கக் கூடுமென்று எதிர்பார்க்கமுடியாது. ஜப்பானியர் களின் பேச்சுகளில் ஜனங்கள் மயங்கி உறுதிகொண்டுவிட்டார்கள். நாம் செய்யக்கூடிய தெல்லாம் மலேயா ஜனஙகளிடம் அவர்களனுபவித்த சுகஙகளைப்பற்றியும் ஜப்பானியர்கள் பொய்யர்களென்று பிரசாரம் செய்வதும்தான். இது பலமானதல்ல. ஜப்பானியரின் சொற்கள் பலமாயிருக்கின்றன. ஜப்பானியர்கள் சொல்வது பொய் என்றும் பித்தலாட்டம் என்றும் நமக்குத் தெரியும். மற்றவர்களும் இதை அறிந்துவிட்டார்களென்று நாம் எண்ணு வது தப்பான காரியம்.

ஜப்பானியர்கள் மலேயாவுக்கு வந்தபொழுது என்ன கொண்டுவந்தார்கள். நமக்குக் கிடைத்த தகவல்களைக்கொண்டு அனுமானம் செய்தால், ஜனங்களை யுத்தமுறையில் தயார் செய்வதற்காக சில முறைகளை முதலில் கையாண்டார்கள். பிரிடிஷார்கள் இதுவரையில் பெற்றிருந்த உத்தியோக கௌரவங்களையெல்லாம் அவர்கள் ஜனங்களுக்கு வழங்கினார்கள். அந்த உத்தியோகங்களின் அமுலை அவர்களிடம் ஒப்புவிப்பதாகவே அவர்களுக்கு எண்ணம் இல்லை. உத்தியோகம் பெயர் வழங்கப்பட்ட மாத்திரத்தில் ஜனங்கள் ஜப்பானியர்கள்

தாராளக் கொள்கையுள்ளவர்கள் என்று எண்ணிவிட்டார்கள். காலக்கிரமத்தில்தான் பட்டம் பெற்றவரும் அவருடைய சிநேகிதர்களும் உண்மையையறிந்துகொள்வார்கள். தாத்காலிகமான ராஜீய முறைகளில் அதிகப் பயிற்சி பெறாத ஒரு நாட்டில் இந்த முறைகள் பலனளிக்கக்கூடும்.

அதிர்ஷ்டவசமாக நேசதேசத்தார்களுக்குச் சாதகமாக, ஜப்பானியரின் கொள்கையை வீணாக்குவதற்கு மலாயில் ஒரு அம்சம் இருக்கிறது. அங்கே அநேக சீனர்களிருக்கிறார்கள். சென்ற ஐந்து வருஷங்களாகத் தங்களுடைய் தாய்நாட்டிற்கு ஏற்பட்ட கதியை அறிந்த சீனர்கள் ஜப்பானியரின் பொய்ப் பேச்சுக்களை நம்பமாட்டார்கள். சீனாவில் யுத்த முயற்சியில் ஈடுபட்டவர்களாகையால் அவர்கள் ஜப்பானை எதிர்க்கும் முறைகளை ஏற்பாடு செய்வதில் உபயோகமுள்ளவர்களாகயிருக்கிறார்கள். ஜப்பானியர்களின் நல்லெண்ணக் கொள்கையை சீக்கிரமாகச் சிதற அடிக்க அவர்கள் வெற்றிகரமாக முயன்றார்களென்றும் நமக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன. ஜப்பானிய நிர்வாகத்தை நடத்திவரும் மிஸ்ட்டர், ஸூஸூகி என்பவர் இந்த சீனர்கள் பொது உடமைக் கக்ஷிக்காரர்களென்று மதித்து பினங்கில் அநேகர்களைச் சுட்டுவிட்டார்.

சீனர்கள் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தினார்கள். இது ஜனங்களுக்கு அனர்த்தமாக முடிந்தது. ஜப்பானியர்கள் அடக்குமுறைகளைக்கையாண்டு வந்தார்கள். ஆகிலும் இது பிரயோஜனப்படவில்லை. எதிர்ப்பு பலப்பட்டது. இந்த எதிர்ப்பு ஒத்துழையாமை என்ற சமாதான முறையைப் பின்பற்றிய போதிலும் அவர்களனுபவித்துவரும் கஷ்டங்களைப் பார்த்தால் மலாயிலுள்ள சீனர்களும், சீனாவிலுள்ள தங்கள் சகோதரர்களைப் போல் நமக்காக யுத்தம் புரிகிறார்களென்றும் ஜப்பானை முறியடிப்பதற்கு இவர்களும் ஒத்தாசை செய்துவருகிறார்களென்றும் சொல்லவேண்டியிருக்கிறது.

ஜப்பானியர்கள் சமாதான முறையில் ஜனங்களை அடிமைப்படுத்திவிடுவது என்று போடும் திட்டத்தைக் கவிழ்த்துவிடுவதில் ஜப்பானியத் துருப்புகளின் நடவடிக்கைகளும் ஒரு பங்கு எடுத்துக்கொள்ளுகிறது. இதில் இரண்டு அம்சங்களுண்டு. ஒன்றைப் பற்றி நான் அதிகமாக விவரிக்கப் பிரியப்படவில்லை. அக்கிரமச் செய்கைகள் ஒன்று. இவைகள் நாங்கிங்கிலும் ஹாங்காங்கிலும் நடைபெற்றன. இவைகளைப் பற்றி ஏராளமாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அநேக இடங்களிலிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் உண்மையான தகவல்களை நம்பாமலிருப்பதற்கு ஒரு முகாந்திரமுமில்லை. இது ஒரு குறுகிய நோக்கமானதால், இந்தக் கட்டுரையில் அதைப்பற்றி நான் பேசப்போவதில்லை.

ஆகிலும் இவைகள் ராணுவத்தினர் செய்த ஆக்கிரமங்கள் என்று தள்ளிவிட முடியாது. நீங்கள் படித்திருப்பீர்கள். நானும் ஊர்ஜிதப்படுத்துகிறேன். காரணமாகச் சொல்லப்படும் யுத்த அவசியமே சில இடங்களில் ஏற்படவில்லை. கெயிபாங்க் என்னுமிடத்தில், நகரத்தைப் பிடித்த துருப்புகள் மட்டுமில்லாமல், மற்றவர்களும், யுத்தம் முடிந்தபின் அட்டூழியம் செய்ய ஆரம்பித்தார்கள். இதேமாதிரிதான் ஒவ்வொரு படைப்பகுதியும், யுத்தத்தில் ஈடுபடாத பின்னணிப்படைகளும் செய்தன என்றும் வெளியாகியிருக்கிறது.

சேனைகளின் மற்றொரு நடவடிக்கை நீண்ட நோக்கமுள்ளது. அதன் பிரகாரம் முறைப்படி கொள்ளையடிப்பது, லஞ்சம் பெறுவது, அபினி முதலிய வஸ்துக்களை கபடமாகக் கொண்டுவருவது போன்ற காரியங்களை, ஆக்கிரமிப்பு நாடுகளின் ராஜீய ராணுவ அமுலை நடத்திவரும் துருப்புகளும், உத்தியோகஸ்தர்களும் நடத்திவந்தார்கள். செகியாங்க் கியாங்க்ஸியில் நடைபெற்ற யுத்தத்தில் படைகள் நகரங்களிலும், கிராமங்களிலும் நுழைந்து அங்கேயிருக்கும் எல்லா சாமான்களையும், இரும்புத் துண்டுகள் முதல் வைத்திய சாலைகளிலுள்ள காயம் கட்டும் துணிகளையும், ஜப்பானுக்கு உபயோகமுள்ள எல்லா சாமான்களையும் கொண்டு போய்விட்டார்கள். இம்மாதிரி பறிமுதல் செய்யவேண்டுமென்றுதான் ஜப்பானிய அதிகாரிகள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

இதற்குப் பிறகு ராஜீய கிளர்ச்சிக்காரர்கள், அதாவது பொது ஜனங்கள், இவர்களை ஜப்பானியர்கள் போக்கிரிகள் என்று கூப்பிடுவார்கள், துருப்புகளை பின்பற்றி வருவார்கள். துருப்புகளின் ரக்ஷணையிலிருந்துகொண்டு, எந்த முறையையும் கையாண்டு அவர்கள் ஜீவனம் செய்துவருவார்கள். அவர்கள் ஜப்பானியஉத்தியோகஸ்தர்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பொருள் சம்பாதிப்பார்கள். இவர்களைப் பற்றி அநேக விவரங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

உதாரணமாக பீகிங்கில் மட்டும் லக்ஷம் குழந்தைகளிருக்கின்றன. இதிலிருந்து அங்கே வயது முதிர்ந்தவர்கள் 2 லக்ஷம் அல்லது 3 லக்ஷம் இருக்கவேண்டும். 1940-ம் வருஷத்தில் பீகிங்கிலிருந்த 2,240 ஜப்பானிய தொழில் ஸ்தாபனங்களில் 500 தாசி வீடுகள். தையுவானிலும் ஜப்பானியக் கடைகளில் பாதிபாகம் தாசிவீடுகள். இந்த மாதிரி ஏராளமான

விபரங்களை வெளியிடலாம். ஜப்பான் விரும்பாத அநேகர்களை இவ்விதமாக வெளியூர்களுக்கு அனுப்பிவிடுகிறது. அவர்கள் சென்றவிடத்திலுள்ள ஐச்வர்யங்களைக் கொள்ளையிட்டு கபளீகரம் செய்து விடுகிறது. ஜப்பானிய உத்தியோகஸ்தர் பணக்காரனாவதற்கும் இது ஒரு உபாயம். இது சிகாகோவிலுள்ள கொள்ளைக்காரர்களின் முறைகளைப் பின்பற்றியிருக்கிறது. இந்தப் போக்கிரிகள் தொழிற்சாலையிலுள்ள சீனக்காரனை வெளியே விரட்டிவிடுவார்கள். வாடகை கொடுக்க மறுத்துவிடுவார்கள். இதற்கு ஜப்பானிய ஆபீஸரின் சம்மதிவேண்டும். அதாவது அவனுக்கு 10 சதவிகிதம் லஞ்சம் கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக ஜப்பானியர்களின் அபின் வியாபார முறைகளைப் பற்றி பேசவேண்டும். அபினைவிட வலுவான குடியல் சாமான்களின் வியாபாரத்தைப் பற்றியும் அதிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தைப் பற்றியும் எழுதுவோம்.

சீனர்களுக்கு அபினியைக் கொடுத்து அவர்களுடைய சீலத்தைக்கெடுத்துவிட வேண்டுமென்று ஜப்பானியர்கள் திட்டம் வகுத்திருக்கிறார்களென்று சிலர் சொல்லுகிறார்கள், ஆகிலும் இது இரண்டாம் பக்ஷமான நோக்கமென்று நான் நினைக்கிறேன். அபின் வியாபாரத்தின் முக்கிய நோக்கம் யாதெனில் லாபம் சம்பாதிப்பதுதான். சேனைகளும் போக்கிரிகளும் அபின் வியாபாரத்திலிருந்து ஏராளமான லாபங்களை வெகு சீக்கிரத்தில் சம்பாதித்து விடுவார்கள்.

மற்ற வகைகளிலும் அவர்கள் லாபம் சம்பாதிக்கிறார்கள். அரசாங்கநிர்வாகம், அநேக அற்பமான வரிவிகிதங்கள் (இவைகள் சாதாரணமாக அந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ராணுவ அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும், இன்னும் பலவிதமான தந்திரங்கள், இவைகளின் மூலம் பொருள் கிடைத்துவிடும்.

பீகிங்கில் நடைபெற்ற மற்றொரு கதையைச் சொல்லுகிறேன். ஜப்பானியர்கள் ஒரு புதிய உத்தரவு போட்டிருக்கிறார்கள். நகரத்திலுள்ள எல்லா சீன ஷாப்புகளும் ஜப்பானிய வியாபாரிகளிடமிருந்து அவர்கள் சொல்லும் விலையைக்கொடுத்து சரக்குகள் பெற்றுக் கொள்ளவேண்டும். எவ்வகைப்பட்டதாயிருந்தாலும், எவ்வளவு மூலதனமிருந்தாலும், ஒவ்வொரு சீன வியாபாரியும் 500 சீன டாலர்கள் கொண்ட தொழில் வரியைச் செலுத்த வேண்டும். இதேமாதிரி அநேக உதாரணங்களிருக்கின்றன. ஏராளமான போக்கிரிகள் செய்துவரும் ஏராளமான சூழ்ச்சிகளைப்பற்றி விவரித்து எழுதுவது சாத்தியமில்லை.

இவைகளில் அடிப்படையான விஷயமும், டோக்கியோவின் கொள்கையும் யாதெனில், மஞ்சூரியாவிலும், சீனாவிலும், தெற்கு சமுத்திரங்களிலும் அபிவிருத்தி சங்கங்களை ஏற்படுத்தி, டோக்கியோவிலிருந்து பொருளுதவி அனுப்புவதுபோல் பேடிஜம் செய்து, ஜப்பானுக்கும் ஜப்பானிய பணக்காரர்களான மிட்ஸூஸ் போன்றவர்கள் ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள பொருளாதார ஐச்வர்யங்களைக் கைப்பற்றிவிடவேண்டியது. இவ்விதமாக ஆக்கிரமிப்பு நாடுகளின் ஐச்வர்யங்களை ஜப்பானின் லக்ஷியங்களுக்கு உபயோகப்படும்படி திருப்பிவிடுகிறது. ஜப்பானிய தொழிலாளிகளுக்கு அதிக லாபம் சம்பாதித்துக் கொடுப்பது. அந்நாடுகளிலுள்ள ஜனங்களுக்கு ஒரு சௌகரியமும் ஏற்படுத்துகிறதில்லை என்ற நோக்கங்களையெல்லாம் எதிரி பூர்த்திசெய்துவிடுகிறான்.

கடைசியாக, நாம் சில காலத்துக்குமுன் கேள்வியுற்றபடி, விசேஷமாக மஞ்சூரியாவில் ஜப்பானிய நிர்வாகம் இகபோக சௌகரியங்களைச் செய்ததாகச் சொல்லப்படுகிறது. ஜப்பானியர்கள் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியிருக்கிறார்களென்றும், இருப்புப் பாதைகளை விருத்தி செய்திருக்கிறார்களென்றும் இதாலியில் முஸோலினி செய்ததுபோல் ரயில் வண்டிகள் மணிப்படி ஓடுகிறதென்றும் சொல்லப்படுகிறது.

இவைகளை நாம் ஆராய்ச்சி செய்வோம். எவ்வளவு பள்ளிக்கூடங்களை ஏற்பாடு செய்திருக்கிறார்களென்று பார்ப்போம். அவர்கள் அநேகம் ஆரம்பித்திருக்கிறார்கள். அவைகளில் கற்றுக்கொடுப்பதென்ன? அவைகளின் மாணக்கர்கள் ஜப்பானின் பொம்மைகளாக இருக்கவேண்டுமென்பதுதான் கற்பிக்கப்படுகிறது. வாசக புஸ்தகங்களையும் வேண்டிய அளவு திருத்தியமைத்து சீன வாலிபர்களின் மனதைச் சுத்திசெய்து வருகிறார்கள். சைனாவின் தேசீய சம்பந்தமான கொள்கைகளை ஊட்டும் படிப்புகள் நிறுத்தப்பட்டன. ஜப்பானிய பாஷையை ஒவ்வொருவரும் அவசியமாக கற்றுக்கொள்ளவேண்டும்.

நாய்க்கொடைகள் போல நாடெங்கும் ஜப்பானிய பாஷை கற்பிக்கும் பள்ளிக்கூடங்கள் உண்டாகிவிட்டன. அவைகளில் வியாபார நோக்கமுள்ள அநேக வியாபாரிகளும் குமாஸ்தாக்களும் சேர்ந்து கல்வி கற்றுக்கொள்கிறார்கள்.

சென்ற டிஸம்பர் மாதத்திற்குப்பின் சீனுவிலுள்ள எல்லா மத போதனைப் பள்ளிக் கூடங்களும், மத்தியப் படிப்பு, ஆரம்பக் கல்விச்சாலைகள் எல்லாம் ஜப்பானியர் வசமாகி ஜப்பானியர்களுக்கு ஆலோசகர்களான பொம்மை அரசாங்கத்தாரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு ஜப்பானிய ஆலோசகரிருக்கிறுர். பீகிங்கிலுள்ள கதோலியர்கள் சர்வகலாசாலையும் இந்த மாதிரியாக ஜப்பான் முறையை அனுஷ்டிக்கவேண்டுமென்று அடிக்கடி வற்புறுத்தப்பட்டது. தங்களுடைய தாய்நாட்டைப் புதிதாகத் தாக்குதல் செய்ததைப்பற்றிக் கொண்டாட ஜப்பானியர்கள் நடத்தும் மீட்டிங்கு களிலும், உத்ஸவங்களிலும் எல்லா மாணுக்கர்களும் கலந்துகொள்ள வேண்டும். எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஜப்பானிடம் ஊதியம் பெற்ற அநேக வேலைக்காரர்கள் ஐந்தாம் படையினராக வேலை செய்துவருகிறுர்கள்.

முடிவாகச் சொல்லும் பொழுது, ஜப்பானுடைய ஒன்றுபட்ட கொள்கையென்ன என்று சொல்லுவது சிரமஸாத்தியம். முதலில் ஜப்பானியர்களின் டம்பமான பேச்சை கவனிக்க வேண்டும். சொல்லும்பொழுது பேச்சுகள் அழகாகத் தானிருக்கின்றன. இரண்டாவதாக சூழ்ச்சிகளிலிருந்தும் சேனைகளின் அக்ரமங்களிலிருந்தும் வெளியாகும் நடவடிக்கைகள் சில. இது இருவகைப்பட்டது. ஜப்பானிலுள்ள இரண்டு முக்கியமான அக்கரைகளுக்குச் சாதக மானது. ஜப்பானின் அதிகார ஆசை பிடித்த ராணுவ அதிகாரிகளுக்கு உதவியாக உலக ஆதிக்கம் பெற முயன்றுவரும் பாஸிஸ்டு கொள்கைகளுள்ள நாடுகளின் உதவிக்காக, ஆக் கிரமிப்பு நாடுகளிலுள்ள எல்லா மனித பலத்தையும் ஐச்வர்யங்களையும் அபகரிப்பது ஒன்று. ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள ஐச்வர்யங்களை அடிமை வேலை செய்பவர்களின் உதவியால் பயன் படுத்தி அதிலிருந்துவரும் லாபத்தை ஜப்பானிய சாம்ராஜ்யப் படைகளும் அவைகளுடன் சேர்ந்து வேலை செய்யும் தொழிலாளிகளும் அடையும்படியாகச் செய்வது இரண்டாவது. ஐரோப்பாவில் நடப்பது போல் தான் இங்கும் நடைபெறுகிறது. ருஷ்யாவிலும் போலந் திலும் ஜெர்மனி நடத்திவரும் யுத்தத்துக்குச் சமானமாக ஜப்பானியர்கள் சீனுவைத் தாக்கி அதன் லாபங்களை பிரயோஜனப்படுத்த முயல்வதைச் சொல்லலாம்; இதே மாதிரியாக பிரான்ஸில் ஜெர்மனி செய்துவருவது போல சைனுவிலும் மஞ்சூரியாவிலும் ஜப்பான் தொழிலாளர்களைச் சேமித்து வருகிறது.

ஆகிலும் உலகத்தின் பொருளாதார முறையில் சீர்திருத்தம் ஏற்படவேண்டியது அவசிய மென்பது இவைகளிலிருந்து ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. ஜப்பானும் ஜெர்மனியும் தங்களுடைய அக்கரைகளுக்கு ஏற்றவாறு இவைகளைச் சீர்திருத்தம் செய்வதென்று தீர்மானித் திருக்கின்றன. இவ்விருவர்களிடமும் உயர்வான ஜாதியென்ற கொள்கை மிகுந்திருக்கிறது. தங்களுடைய அமுலுக்குட்பட்ட நாடுகளை புனருத்தாரணம் செய்யவேண்டுமென்று அந்த ரங்க சுத்தியாக அவர்கள் நம்புகிறுர்களென்றும் சொல்லவேண்டும். அதாவது தங்களுடைய சுயநலத்தையும் பாராட்டவேண்டும். அவர்களுடைய கொள்கைகளை நடத்திக்காட்டும் சமயம் வரும்பொழுது தனிப்பட்ட நபர்களுக்கு இது லாபகரமாகயிருக்கிறது. இது நடைபெற வேண்டுமானுல் ஒருவன் மற்ருெருவனைத் துன்புறுத்தவேண்டும். (கரகோஷம்).

---

## "ஜீப்ஸ்" என்பது என்ன. அதன் உபயோகமென்ன.

(தென் இந்திய மோட்டார் சங்கத்தின் வெளியீடு).

சமீபகாலத்தில் அநேக மாதங்களாக எல்லா போர்முனைகளிலும் நேசநாடுகளின் துருப் புகளின் முஸ்தீப்புகளில் "ஜீப்ஸ்" என்னும் லேசான டாங்கிகளும் சேர்ந்தவை. ஜீப்பின் அமைப்பு என்ன, அதன் உபயோகமென்ன என்று பார்ப்போம். மற்ருெரு கட்டுரையிலுள்ள சில குறிப்புகளை இங்கு வெளியிடுகிருேம். நவீன யுத்தத்தில் உபயோகப்படும் இந்த ஜீப்ஸ் களைப்பற்றிய பூரா விவரமும் அதில் காணப்படுகிறது. இவைகள் இந்தியாவிலும் தெற்கு வெளிகளிலுள்ள ரஸ்தாக்களிலும் ஓடுகின்றன.

### அநேக நாமாக்கள்.

அமெரிக்கத் துருப்புகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சிறிய மோட்டார் வண்டியை ஒன்று அல்லது இரண்டு வருஷத்துக்குமுன் கண்ணுற்றவர்கள் அதைப்பற்றி உடனே ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

அந்த வண்டிக்கு அடுக்குத் தொடர்கள் உண்டு. வேவு பார்க்கும் வண்டியென்று சொல்லப்பட்டது. சுருக்கி எழுதும் சுபாவமுள்ள பத்திராதிபர்களுக்கு இது விளங்கவில்லை. இதை "அங்கண வண்டி" என்று பெயரிட்டார்கள். அதுவும் பிரயோஜனப்படவில்லை.

இன்னும் சிலர் "மின்னல் வண்டி" என்று கூப்பிட்டார்கள். அதுவும் உபயோகப்படவில்லை. இந்த வண்டியின் பக்கத்தில் ஜீ. பி. என்று வரையப்பட்டிருந்ததைப் பார்த்து சேனை முகாமி லுள்ள ஒரு சிப்பாய் இது ஜீப் என்று பெயரிட்டான். ஜீ. பி. என்பது பொதுக்காரியங்கள் என்று பொருள்படும்.

இயந்திர சாதனங்களால் நடைபெறும் இந்த யுத்தத்தில் ஜீப் ஒன்றைத்தான் நமது இயந்திர நிபுணர்கள் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நாம் அநேக வருடங்களாகப் பார்த்ததைவிட பெரிய வெடிவிமானங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. தூரத்தும் விமானங்கள் அல்பமானவைதான். ஆகிலும் இந்த சிறிய விமானங்களில் பீரங்கிகளுமிருக் கின்றன. டாங்கிகளைப்பற்றி நமக்குத் தெரியும். இதே மாதிரி அநேகம் நமக்கு அறிமுகமாகி விட்டது. மோட்டார்களைப் பற்றியும் நமக்கு அறிவுண்டு. பெட்ரோலினால் ஓட்டப்படும், தகடுகளால் மூடப்பட்டும், குரோம் தோலினாலும் தொங்கட்டான்களும், தாழ்ந்த கதவுகளும், சிறிய ஜன்னல்களுமுள்ள மோட்டார்களை நாம் பார்த்திருக்கிறோம். போக்குவரத்துக்கு லாயக்கானது வண்டியின் அழகல்ல. வண்டியின் அமைப்புத்தான் முக்கியமென்பதை நாம் அறியவேண்டும்.

### உறுதியுள்ளது.

ஜீப் என்பது உறுதியுள்ளது. இது கால்டன் எடைமானமுள்ளது. இதன் அமைப்பும் சுலபமானது. உபரியான காட்ஜட் ஒன்றும் கிடையாது. இதனால் தரையில் அதை நடத்து வது சுலபமானது.

### சிரமமான அலுவல்கள்.

சுங்கிங்கிலிருந்து வெளிவந்த ரிபோர்ட்டுகளிலிருந்து பர்மா ரஸ்தாவுக்குப் பதிலாக இந்தியாவிலிருந்து சைனாவுக்குப் போகும் புதிய ஸப்ளை மார்க்கத்தை செங்குத்தான குன்று களிலும் அடர்ந்த காடுகளிலும் அமைத்தது இந்த ஜீப்தான். இதில் நால்வர் பிரயாணம் செய்யக்கூடும். இந்தப் பாதையைக் கடந்த முதல் மோட்டார் வண்டி இது தான். பத்திராதிபர்கள் இந்த வண்டிகளில் சென்று சமாசாரங்களையும் படங்களையும் பாமர ஜனங்களுக்கு வெளியிட்டிருக்கிறார்கள். இவைகளை சேனையிலிருந்து அவர்கள் எடுத்துக்கொண்டு போனார்கள்.

ஆஸ்திரேலியாவில், தரையின் நிகழ்ச்சிகளுக்கு பாதகம் ஏற்படாமல் விமான தளத்தின் அடியில் அமெரிக்கத் துருப்புகள் தந்திக் கம்பியை அமைத்தார்கள். சாதாரணமாக இதற்கு அநேக நாட்கள் பிடித்திருக்கும். ஜீப்பை ஒரு கலப்பையில் கட்டி ஒரு மணிக்கு பத்து மைல் வீதம் குழி தோண்டப்பட்டது. அதற்குப் பின் மற்றொரு ஜீப் வந்தது. இதில் கம்பிகள் வைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின் மற்றொரு ஜீப்பிலிருந்த உருளையானது கம்பிகள் அமைத்த இடத்தை சமப்படுத்திற்று. இரண்டு மணிக்குள்ளாக இந்த வேலை முடிந்தது.

சீனாவில் பிரிடிஷ் துருப்புகள் இவைகளைத் தங்களுக்கும், பொதுஜனங்களுக்கும் போக்கு வரத்துக்காக உபயோகிக்கிறார்கள். நான்கு கால்கள் அமைக்கப்பட்டிருப்பதால் இவைகள் வயல்களிலும் அறுத்தோடிகளின் பேரிலும் சுலபமாகச் செல்லக்கூடும். இராக்கால ரோந்துக்கு உபயோகமுள்ளவை. விமான தளங்களிலும் பழுதுபட்ட விமானங்களை அப்புறப்படுத்த லாயக்கானவை.

ரெங்கூனிலிருந்த கடைசிப் பாதுகாப்புப் படைகள் லாஷியோவுக்கு ஜீப்புகளில்தான் சென்றனர். கரடுமுரடான ரஸ்தாக்களில் மணிக்கு 40 அல்லது 50 மைல்கள் வீதம் சென்றன. மூன்று டன் எடைமானமுள்ள லாரிகளையும் இழுத்துச் சென்றன. சீனாவில் ஜீப்புகள் செய்யும் வேலையைப் பார்த்துவிட்டு ஒரு நிருபர் எழுதுகிறார். இவைகள் மலைகளும் சகதியும் நிரம்பிய பள்ளத்தாக்குகளும் உள்ள கிரீஸிலும், ஆல்பேனியாவிலும் உபயோகப்பட்டிருக்கும் என்கிறார்.

பயிற்சிபெறும் துருப்புகள் ஜிப்பைக்கண்டு ஆசைப்படுகிறார்கள். இது சிறியதாகவும், வேகம் பொருந்தியதாவுமிருக்கிறது. ஜீப் நீந்துகிறதென்று அவர்கள் சொல்லுகிறார்கள். 65 டிகிரி சாய்வு உள்ள மலைச்சரிவில் வெள்ளாடு வருவதுபோல அவைகள் செல்லும். சகதிகளில் குழி முயல்கள்போல் சென்றுவரும். சிறிது திருத்தியமைத்தால் ஆபத்து சகாய வண்டியாக மாற்றிவிடலாம். நாலு பேர்களைக் கொண்டு போகலாம். அதன் அமைப்பின் சௌகரியத்தினால் அது முன்னணி வரிசை சமீபத்திலும் சஞ்சரிக்கக்கூடும். யுத்தத்திலும், ஒத்திகையிலும் ஜீப்பை ஆயுதம் தாங்கியாக உபயோகிக்கலாம். 37 மிலிமிட்டர் உள்ள டாங்கி எதிர்ப்பு பீரங்கியை ஒரு ஜீப்பு இழுத்துச்செல்லும் 75 மிலிமிட்டர் உள்ளதையும் கொண்டுபோகவும் லாயக்கானது.

### இதர உபயோகங்கள்.

பிரயாணிகளுக்கு லாயக்கான வண்டிகளைத் தயாரித்துவந்து இப்பொழுது ஆயிரக் கணக்கான ஜீப்புகளைக் கட்டிவரும் வில்லிஸ் தொழிற்சாலையிலுள்ள எஞ்சினியர்கள் ஜீப்பின் உபயோகங்கள் இன்னும் அநேகமிருக்கின்றனவென்று அபிப்பிராயப்படுகிறார்கள். ராணுவத்தில் அநேக சில்லரை வேலைகளுக்கும் இதை உபயோகிக்கலாம். இங்கு சிலவற்றைக் கூறுவோம். விமானங்களின் தேடு விளக்குகளுக்கு மின்சார சக்தி கொடுக்கக்கூடிய சலன இயந்திரம். விமானங்களின் ஓடுபாதைகளில் வெடிகுண்டுகளால் ஏற்பட்ட பள்ளங்களை நிரப்புவதற்கு மண்ணேற்றிச் செல்லும் வண்டி, புகையைப் பரவச்செய்வது. போர்முனையில் ஒலிபரப்பும் கருவி, போர்முனையில் டெலிபோன் பேசும் இயந்திரம், தரைப்படைகளைக் காப்பாற்றுவதற்கும், குடைத்துருப்புகளைத் தாக்குவதற்கும் எதிர்ப்பு பீரங்கிகளை ஏற்றிச் செல்லும் வண்டி. பாலைவனங்களிலுள்ள எல்லைப்புற தற்காப்பு ஸ்தலங்களுக்குத் தண்ணீர் ஸப்ளை செய்யும் மோட்டார். முன்னணிப் படைகளுக்கு வைத்திய வசதியும் முதலுதவியும் அளிக்கும் படை. டாங்கிகளுக்கு நிலக்கரி ஸப்ளை செய்யும் சாதகம். முன்னணியில் சண்டை செய்யும் துருப்புகளுக்கு ஆகாரம் ஸப்ளை செய்யும் படை. பாலங்களையும் இருப்புப் பாதை ஜங்ஷன்களையும் தற்காப்பு செய்யும் சலனப்படை. தீ அணைக்கும் படைக்கு உதவிப் படை. காற்றில்லாத மோட்டார் டயர்களுக்கு காற்றடிக்கும் இயந்திரம்.

---

## உபயோகமில்லாத சாமான்களைச் சேதப்படுத்தாது மீண்டும் உபயோகம் செய்யும் முறை.

### (மதராஸ், அகில இந்திய ரேடியோவில் பேசிய பேச்சு).

இதுவரை பேசியதையெல்லாம் கேட்பவர்களுக்கு, இதுவரை யுத்தவேலையில் என்னென்ன செய்யப்பட்டு இருக்கிறது என்பதிலேயே பேசியவர்கள் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிய வருகிறது. இன்றைய இரவு யுத்தத்திற்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி நான் அதிகமாய்க் கூறப்போவதில்லை. உண்மையில், யாருக்கும் சிரமமன்னியில் செய்யக்கூடிய சில சிறிய விஷயங்களை நான் குறிப்பிட்டுச் சொல்லப்போகிறேன். இந்த சிறு விஷயங்கள் முக்கியமானவை என்று இதுகாறும் கருதப்படவில்லை. யுத்த வேலையில் என்னென்ன செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும், விரும்பவேண்டியவை பல இருக்கின்றன என்பதையும் நினைந்தபின் இதுகாறும் சும்மாவிருந்ததானது என்னுடைய புறக்கணிப்பே காரணம் என்பதையும், நான் கபடமில்லாம் ஒப்புக்கொள்ளுகிறேன்.

யுத்த வேலையில் நான் என்னென்ன செய்யவில்லை என்பதற்கு நான் உங்களுக்கு ஒரு சில உதாரணங்களைக் கொடுக்கிறேன். க்ஷவரம் செய்யும் ரேஸர் தகடுகள் (Razer blades) கூர் செய்யப்பட்டால் இன்னும் 3 நாட்களுக்குப் பிரயோஜனப்படும் என்பதைத் தெரிந்திருந்தும் நான அவைகளை கூர் செய்யாமலேயே சோம்பேறித்தனமாய் இருந்துவிட்டேன். அந்த ரேஸர் தகடுகளைக் கூர்படுத்த நாம் எடுத்துக்கொள்ளும் கஷ்டத்தைவிட இன்னும் அதிகமான கஷ்டமாய் ரேசர் தகடுகளின விலை எவ்வளவு அதிகமான விலையாக ஏறியிருக்கிறது என்பது நாம் எல்லோருக்கும் தெரிந்ததே. புது தகட்டிற்கு அதிக விலைகொடுத்து வாங்கிக் கொண்டிருந்தேன். நான் கடிதங்கள் எழுதும்போதெல்லாம், டெலிபோனில் பேசினால் லெட்டர் எழுதாமல் அதனால் காகிதங்கள் மீதப்படுத்தலாம் என்று நினைப்பதே இல்லை. நான் பழைய உபயோகித்த கூடுகளை (envelops) மீளவும் உபயோகப்படுத்தாமல் உபயோகப்படாத காகிதங்கள் எறியும் பெட்டிகளில் எறிந்துவிடுகிறேன். தினசரி சமாசாரப் பத்திரிகைகளை வாங்கி, அவைகளைச் சேர்த்துவைக்க வேண்டியிருந்தும் சேர்த்துவைக்காமல் இருக்கிறேன். இதுபோலவே இன்னும் சில சில்லரை விஷயங்களுமாகும். என் சொந்தக் குற்றங்களை நீண்ட அளவில் பார்க்காமல் அவைகளை இனிமேல் என்ன செய்யவேண்டும் என்பதை நாம் கவனிப்போம்.

### உபயோகமற்ற சாமான்கள்.

உபயோகமற்ற பழைய சாமான்களின் தேவையைக் குறித்து, பத்திரிகைகள் மூலமாயும் ஒலிபரப்புகளின் மூலமாயும், பெரிய விளம்பரங்களிலும் தேவை என்று தெரியப்படுத்தப் பட்டன. ஒரு பங்களாவிலிருந்து மற்றொன்றிற்கு உன் இருப்பை மாற்றுங்கால், உன்னுடைய அலமாரிகளையும், எழுதும் மேஜைகளையும், டிராயர்களையும், புஸ்தகப் பெட்டிகளையும் காலி செய்யும்பொழுது, அவசியமில்லாத எவ்வளவு பழைய சாமான்கள் குவிந்துகிடக்கின்றன என்பதைப் பார்த்து நீங்கள் எல்லாம் ஆச்சரியப்படுவீர்கள் என்பது நான் நிச்சயிக்கிறேன். இத்தகைய சாமான்களையேதான்......உபயோகமற்ற சாமான்களைச் சேதப்படுத்தாமல்

சேகரித்துவைப்பவர்கள் வேண்டுவதும். வீட்டை முற்றிலும் சிறிது சிரமத்தோடு பரிசோதித்துப் பார்த்தோமானால் நாம் மிகுந்த அளவான சாமான்களைச் சேகரித்துக்கொடுக்கலாம்.

நான் என் கிராமபோனில் கண்ணுங்கருத்துமுள்ளவன். சில சந்தர்ப்பங்களில் நானாவது என் வேலைக்காரனாவது அந்த கிராமபோன் தட்டை அஜாக்கிரதையினால் மிதித்து உடைத்தும் இருக்கிறோம். ஆனால் உடைந்த கிராமபோன் தட்டுகளை பத்திரப்படுத்தி உபயோகமற்ற சாமான்களைச் சேகரிக்கும் டெப்போக்களுக்கு அனுப்புவதற்கு நினைத்ததே கிடையாது. உடைந்த கிராமபோன் தட்டுகளும் பழைய கிராமபோன் தட்டுகளும் மீளவும் உபயோகத்திற்கு வேண்டப்படுகின்றன.

ஒருவன் ஒரு வருஷத்தில் சேர்த்துவைத்திருந்த புகைப்பட இருணங்கள் (negative) என்ன ஆகின்றன? நான் புகைப்படங்களின்மேல் கண்ணுங்கருத்துமாயிருக்கிறேன். என்னிடத்தில், புகைப்படங்கள் அச்சடிக்காமலே வைத்திருந்த நூற்றுக்கணக்கான இருணங்கள் இருக்கவேண்டும். ஆனால் உண்மையில் என் அஜாக்கிரதையினால் என்னிடத்தில் இப்பொழுது கைவசமிருப்பதைவிட அநேகம் இருணங்கள் தொலைந்துபோய்விட்டன. உபயோகமற்ற சாமான்கள் சேகரிக்கும் டெப்போக்களில் அவைகளும் மிகுதியாய் வரவேற்கப்படுகின்றன. நமது பாட்டரி விளக்குகளுக்கு புது பாட்டரிகள் வேண்டும்போது, நம் பழைய பாட்டரிகள் என்னவாகின்றன? அவைகளை வெகு சுலபமாய் நாம் தூக்கியெறிந்துவிடுகிறோம். நாம் அவைகளைச் சேர்த்துவைப்பதே இல்லை, காலியாய்ப்போன நெருப்புப் பெட்டிகள், அதிர்ஷ்டவசமாய் பெட்ரோல் அதிகமாயிருந்தால் உங்கள் மோட்டார்கார்களின் பாட்டரிகள் காலி சீசாக்கள், புகைப்பட காகிதங்கள் இவைகள் எல்லாம் உண்மையிலேயே சிறிதும் பிரயோஜனமற்றவையல்ல. ஆனால் மிகவும் பிரயோஜனமுள்ளவைகளேயாகும். உபயோகமற்ற சாமான்களைச் சேகரிக்கும் டெப்போக்களுக்கு நீங்கள் அனுப்பும் உபயோகமற்ற சாமான்கள் எல்லாம் மிகவும் பிரயோஜனமுள்ளதாயும், யுத்தத்திற்கு முக்கியமானதுமான பல சாமான்களாகச் செய்யப்படுகின்றன. ஆகையால் நாம் சேகரிக்க முடிந்த உபயோகமற்ற சாமான்களையெல்லாம் சேகரித்து அனுப்புவதானது யுத்தத்தில் எதிரிகளை நசுக்குவதற்காக செய்யும் வழிகளில் ஒன்றாகும்.

**ஸ்திரீகள் எவ்வாறு யுத்தத்திற்கு உதவமுடியும்.**

இதுவரையிலும் எவ்வாறு ஆண்கள் உபயோகமற்ற சாமான்களைச்சேகரிக்கமுடியும் என்று கூறினேன். இப்பொழுது வீட்டிலுள்ள ஸ்திரீகள் என்ன செய்யவேண்டும் என்று பார்ப்போம். அவர்கள் பொதுக்காரியத்தில் நமக்கு உதவியாயிருக்கமுடியும். தலை அலங்காரங்களுக்கு வேண்டிய அலங்காரப்பொருள்கள் எல்லாம் இக்காலத்தில் கிடைப்பது மிகவும் அரிது மட்டுமல்லாமல், யுத்த இயந்திரங்களுக்கு மிகவும் உபயோகமானதாயுமிருக்கின்றன. ஆகையால் அம்மாதிரி தலையாரங்கள் இந்த யுத்தம் நீடித்திருக்கும்வரை நிறுத்திவைக்கலாம். அல்லது சிற்சில சமயங்களில் செய்துகொள்ளலாம். இன்றையதின இந்திய ஸ்திரீகளின் நகங்களை அலங்கரிக்கும் சாயமுடைய நகத்தில் அணியும் களிம்புகளை அணியாதவர்கள் யாருமில்லை. அவைகளில் மருந்து சாமான்கள் இருக்கின்றன என்றும், அவைகள் வேறு வேலைகளுக்குப் பயன்படும் என்பதும் நான் நிச்சயமாய் அறிகிறேன். அவைகளை நீக்குவதற்கு உபயோகப்படுத்தப்படும் மருந்து, உயர்ந்த விலைகளிலே நல்ல வசீகரமான சீசாக்களிலே விற்றாலும்கூட யுத்தத்திற்கு மிகவும் உபயோகமானவை என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். அநேகமான ஸ்திரீகள் சிகரெட் பிடிப்பவர்களாகவும், சில தேசங்களில் சுருட்டுப் பிடிப்பவர்களாகவும் இருக்கின்றன. ஆனால் நான் சிகரெட் குழாய்களையும், புகைக் குழாய்களையும் உபயோகப்படுத்துவதில்லை என்று மிகவும் சந்தோஷத்தோடு கூறுகிறேன். அவர்களுக்கு யுத்தம் முடியும்வரை இந்த வழக்கங்களை நிறுத்திவைப்பது நலம். வேண்டிய அளவு ஸப்ளை வரும்வரையும் கார்ட்டூன் படங்களை இப்பேபர்களில் பிரசுரிக்காமல் இருப்பதான இந்த ஏற்பாட்டைக்காட்டிலும் காகிதங்களைச் சிக்கனப்படுத்துவதற்கு வேறு முக்கியமான ஏற்பாடுகள் ஏதும் செய்யவேண்டிய அவசியமில்லை.

வேண்டாத சாமான்களை ஸ்திரீகளும் சேகரிக்கிறார்கள். ஆனால் அவர்கள் அவைகளை உபயோகமற்ற சாமான்களைச் சேகரிக்கும் டெப்போக்களுக்கு அனுப்பவேண்டிய சிரமம் எடுத்துக்கொள்வார்களா என்று சந்தேகிக்கிறேன். எல்லாவற்றையும் அவர்கள் அரையில் அடைத்துவைத்துவிடுகிறார்கள். அவர்கள் மலைகளுக்குப் போகும் தருவாயில் வீட்டை புருஷர்களிடம் ஒப்புவிக்குமுன் சுத்தமாக வைப்பதற்காகவும், அல்லது வீட்டை பூட்டிக் கொண்டு செல்வதற்காகவும் அவர்கள் இம்மாதிரி செய்துகொள்ளுகிறார்கள்.

**குழந்தைகளின் பழைய விளையாட்டுக் கருவிகள்.**

நாம் இப்பொழுது குழந்தைகள் யுத்தத்திற்கு என்ன செய்யலாம் என்று பார்ப்போம். குழந்தைகளின் உடைந்துபோன விளையாட்டு சாமான்கள், முக்கியமாய் ஸெலிலாய்டு

பொம்மைகள், குழந்தைகளை வைத்து இழுக்கும் வண்டிகள், இன்னும் இவைபோன்ற ஒரு காலத்தில் குழந்தைகளின் மகிழ்ச்சிக்கு வேண்டியிருந்து, இப்பொழுது உபயோகமில்லாமல் அறைகளில் கிடக்கும் இதர விளையாட்டு சாமான்களும் என்னவாகின்றன? அநேகமான குழந்தைகள் தகர டப்பாக்களில் அடைத்துவைக்கப்பட்டிருந்த உணவினால் வளர்ந்திருக்கின்றன. அந்த காலியாய்போன தகர டப்பாக்கள் இப்போது உபயோகமற்ற சாமான்கள் சேகரிப்பவருக்கு மிகவும் முக்கியமானதும் உபயோகம் உடையதாயும் இருக்கிறது. பள்ளிச் சிறுவர்கள், இப்பொழுது பள்ளிக்கூடங்கள் மூடியிருப்பதால், பழைய உபயோகமற்ற நோட் புஸ்தகங்களை வீட்டில் விடுத்துச்சென்றிருப்பார்கள். அவைகளைச் சேகரித்து உபயோகமற்ற சாமான்கள் சேகரிப்பவருக்கு அனுப்ப இது ஒரு நல்ல தருணமாகும். இப்போது கச்சேரிகளில் என்ன செய்யலாம். டைப் அடிக்கும் இயந்திரங்களின் பழைய நாடாக்கள், இனி உபயோகப்படுத்த முடியாதவை, பழைய பேபர்கட்டுகள், சென்ற வருஷத்திய காலண்டர்கள் உபயோகமற்ற புஸ்தகங்கள், இன்னும் இவைபோன்ற மேஜையை நிறப்பியிருக்கும் சாமான்கள் எல்லாம் உபயோகப்படுத்த அனுப்பலாம். இன்று உபயோகமற்றசாமான்களைச் சேகரித்து மீளவும் உபயோகப்படுத்துமாறு செய்யும் டெப்போக்களில் வேண்டப்படும் தீய்ந்து போன பழைய மின்சார விளக்கின் பல்புகள் என்னவாயின?

இதுகாறும் நமக்கு உபயோகமற்றவைகளும், அவைகளைச் சேர்க்கப்படும் டெப்போக்களில் வரவேற்கப்படுவனவும் ஆன பல சாமான்களைப்பற்றி கூறமுயன்றேன். இப்பொழுது யுத்த முயற்சிக்கு உபயோகப்படாத சாமான்களைச் சேகரிப்பதன்னியில் வேறு வழிகளை கவனிப்போம். சில சாமான்களின் உபயோகத்தை, யுத்தத்தில் உபயோகப்படுத்துவதற்காகக் குறைத்துக்கொள்ளுவோம். மறுபடியும் எனக்குத் தோன்றும் சில குற்றங்களை கூறுகிறேன். மின்சார சக்திகளை மீதப்படுத்துவதற்காக நாம் நம் அளவுகளைவிட்டு வெளியே போகும்போதும் மின்சார விசிறிகளை நிறுத்திவிட்டுப் போகவேண்டும். அவசியமில்லாத சமயங்களில் விளக்குகளை எறிக்காமலும், விசிறிகளை ஓட்டாமலோ நம்மால் முடிந்தவரை மின்சார சக்தியை மீதப்படுத்தவேண்டும் என்பது நீங்கள் எல்லோரும் அறிந்ததே. இன்னமும் விலையுயர்ந்த காகிதங்களிலே சிலர் தனக்கு மதிப்புவரும் என்ற கருத்தினால் கடிதங்கள் எழுதுகின்றனர். ஆனால் இக்காலத்தில் எந்தவிதமான காகிதத்துண்டுகளில் குறிப்புகள் எழுதினால் போதுமானது. சமூக வாழ்க்கையிலே அவசியமெனக் கருதப்படும் அனுமதிச் சீட்டுகள் இவ்வளவு அதிகமாக உபயோகப்படுத்தவேண்டியதே இல்லை. அறிமுகப்படுத்தப் பட்டபின் அச்சீட்டுகளை திருப்பிக் கொடுக்கும்போது யாரும் அதனை லக்ஷியம் பண்ணுவதில்லை. பிரிட்ஜ் இன்னும் ஆட்டத்திலே குறியாயுள்ளவர்களும் புது சீட்டுக்கட்டை உடைக்க வேண்டியதே இல்லை. சீட்டுகள் சிறிது அழுக்குப்பட்டாலும் அதனால் பறவாயில்லை. புதிதாக இருந்தாலும், பழயதாயிருந்தாலும், ஸ்பேட் குறியுள்ள (ஒற்றைக் குறியுள்ள) ஏஸ்தான் அந்த ஆட்டத்தில் உயர்ந்த எண்ணிக்கையுடையது.

### உபயோகமற்ற சாமான்களைச் சேகரிக்கும் டெப்போக்களுக்கு அவைகளை அனுப்புங்கள்.

உபயோகமற்ற சாமான்களைச் சேகரிக்கும் பல வழிகளை இன்றிரவு சொல்லியிருக்கிறேன். பல அநேக வழிகள் உங்களுக்கும் தோன்றும் என்பதில் நான் சந்தேகிக்கவேயில்லை. நமது முதல் கொள்கையான நேசக்கட்சியினரின் வெற்றிக்கு வேண்டியவைகளைச் செய்ய உதவியாய் இருக்கும் எந்த வழிக்கும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றிரவு நான் உங்களுக்குக் கூறிய வழிகள் எல்லாம் உங்களுக்கு பொருளாதார விஷயத்தில் எவ்வித கஷ்டத்தையும் கொடுக்கமாட்டா. நாம் செய்யவேண்டியதெல்லாம் நமக்கு உபயோகமற்ற சாமான்களைச் சேகரித்து அவைகளை உபயோகப்படுத்துமாறு டெப்போக்களுக்கு அனுப்புவதேயாகும். இந்த அவசியமான காலத்தில் அவ்விதம் செய்வதால், நாம் நினைப்பதைவிட அதிகமாக யுத்த வேலைகளுக்கு உதவியாயிருக்கிறோம்.

நான் மாத்திரம் உபயோகமற்றவைகளைச் சேகரிக்காத குற்றவாளியல்ல, இன்னும் பலர் உளர். நாம் அவைகளைச் சேகரித்ததற்கு கூற முடிந்த காரணமான சோம்பேறித்தனத்தை இனி நாம் வளர்த்து சோம்பேறிகளாய் இல்லாமல், ஜாக்கிரதையாய் உபயோகமற்ற சாமான்களைச் சேகரித்துக்கொள்ள இன்றிரவு நாம் நம் மனதில் நிச்சயித்துக்கொள்வோம். நாம் வேணுமென்றே அவைகளைச் சேகரிக்க மறுக்கவில்லை என்பது நான் நிச்சயமாய் உணருகிறேன். ஆனால் அவ்வாறு இருந்ததற்குக் காரணம் அவைகளின் பிரயோஜனத்தை நாம் அறியாததேயாகும். சமாதான காலங்களில், நாம் அவைகள் என்னவாயின என்று கவனிப்பதேயில்லை. விளையாட்டாகத் தூக்கி எறிந்துவிடுகிறோம். அவைகளை எறித்தும்விடுகிறோம். அவைகள் எதிரிகளை நாசமாக்க இன்றைய தினம் உதவியாயிருக்கின்றன. ஒவ்வொரு சிறிய சாமானும் உபயோகப்படும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

# வேலை செய்யும் கூட்டத்தார்.

(ஸௌத் இந்தியா புல்லெட்டின்).

யுத்த ஆரம்பத்தில் இந்த ராஜதானியிலுள்ள ஸ்திரீகள் தையல் வேலையும் பின்னல் வேலையும் தவிர மற்ற எந்த விதமான வேலையும் செய்ய இயலவில்லை. மதருஸ் ஸ்திரீகள் மேற்படி சொன்ன வேலைகளையும் செயிண்ட்ஜான் அம்புலன்ஸிலும் சேர்வதையும் வேறு வேலைகளில் ஈடுபடவில்லை. யுத்த ஆரம்பத்தில் இவர்கள் அதிக நம்பிக்கையுடனும் பிடிவாதத்தோடும் வேலை செய்து வந்தார்கள். அவர்கள் உற்பத்தி செய்தவைகள் எல்லாம் கடைத்தெருவில் விற்கப்படுவதென்றும், அவர்கள் பின்னிய சாமான்கள் எல்லாம் தலைமை காரியாலயத்திலுள்ள ஒருவளால் கலைக்கப்பட்டு மறுபடியும் தயார் செய்யப்படுகிறதென்றும், சேமிப்பு ஸ்தலத்தில் அடுக்கி வைப்பதற்காகச் செய்யும் வேலையில் நாங்கள் ஈடுபடமாட்டோம் என்றும் சொல்லிவந்தவர்களையும் மீறி தங்களுடைய வேலைகளில் ஊக்கத்தோடு ஈடுபட்டிருந்தவர்களுக்கு நமது நன்றி உரித்தாகும். சாமான்கள் சேமிப்பு இல்லாமல் யுத்தம் எப்படி நடைபெறும் என்பது புரியவில்லை. உற்பத்தியாகும் ஒவ்வொரு கால்சட்டையும் ஒவ்வொரு சிப்பாய்க்கும் உடன்காலத்திலேயே போய்ச்சேரும்படியாய் எப்படி ஏற்பாடு செய்வதென்பதும் புரியவில்லை.

ஆனால் மதராஸிலுள்ள ஸ்திரீகள் அநேகர் அதைரியப்பட்டாலும், வேலையில் தளராது ஈடுபட்டு, அவைகளின் கடைசி பலனால் வெற்றியடைந்தார்கள். அவர்கள் தைத்தவைகளெல்லாம் மலேயா தேசத்திற்கும், மத்தியக்கிழக்குப் பிரதேசங்களுக்கும் கப்பலில் அனுப்பப்பட்டன. குளிரால் கஷ்டப்படும் இரான், வட ஆபிரிக்காவிலுள்ள மனிதர்கள் இந்த கைத்த சாமான்களால் நன்மை அடைந்த காரணத்தால் இவ்வேலை செய்யும் கூட்டத்தினரையும், அவர்கள் அதைரியப்படுத்தப்பட்ட காலத்தும் செய்து தந்த மேல் ஜோடுகளையும் ஸ்தோத்தரித்தார்கள். பொய்க்கதை கட்டி விடுபவர்களின் முயற்சிகளால் தேவைப்பட்ட அளவு மேல் ஜோடுகள் உற்பத்தி செய்ய முடியவில்லை என்பது உண்மை. சில இடங்களில் உஷ்ணம் தரத்தக்க உடைகளும் கிடைக்கவில்லை. சில காரணங்களால், கதை கட்டிவிடுபவர்கள் தையல், பின்னல் முதலிய வேலைகளுக்கு எதிர் வாதமாகச் சொல்லிக்கொண்டிருந்தனர். இதனால் இவ்வருஷத்தில் இரு பங்கு பின்னல் வேலைகளை ஒவ்வொரு ஸ்திரீயும் செய்ய வேண்டும். அதுவேதான் அவசரத் தேவையும் என்று யாவரும் மறந்து விட்டனர்.

தென் இந்திய ஸ்திரீகளுக்குத் தையல் வேலையில் சேருவது மட்டும்தான் யுத்த முயற்சி அல்ல. ஸ்திரீகள் உதவிப் படையில் சேரலாம். துருப்புகளுக்குப் பண்டங்கள் விற்பனை செய்யலாம். உபசரணைகளும் செய்யலாம். ஸ்திரீகள் செய்யக்கூடியது அதிகம் இருக்கிறது. ஆனால் தையல் வேலை செய்யும் கூட்டத்தினர் சர்வ சாதாரணமானவர். இக்காலத்திற்கு உரியவர் இல்லாதவர் என்று கருதப்படலாம் என்ற பயம் ஒன்று இருக்கிறது. மதருஸ் ஸ்திரீகளின் யுத்த வேலைகளில் இது ஒரு முக்கிய பாகமாகும். இதனைச் சாதாரணமாய் கருதி புறக்கணிக்கக்கூடாது. ஆனால் வேலையின் போக்கு மாறியிருக்கிறது என்பது உண்மைதான். கைவசம் சிறு சாமான்களான கட்டும் துணிகள் எல்லாம் தேவையுள்ள வரை குவிந்து கிடக்கின்றன. நமக்கு வேண்டியதென்னவென்றால், கால்சராய்களும், சட்டைகளும் செய்யத்தக்க அனுபவமுள்ள வேலையாட்களேயாகும். துருப்புகளுக்கு உபரியாய் உடைகள் அவசியமாக இருப்பதினால் செஞ்சிலுவை உடைகளையும் சேர்த்து "ஜாயிண்ட் வார் சாரிட்டீஸ் காண்டீன் ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்டு" மூலம் ஸப்ளை செய்து வருகிறோம். சென்ற வருஷத்தில் துருப்புகளிடம் 2 சட்டைகளும், 2 ஜோடி கால்சட்டைகளும் இருந்ததாலும், 24 மணி நேரமும் அவைகளையே உபயோகப்படுத்தப்பட வேண்டியிருந்ததாலும், உஷ்ண காலத்தில் அவைகள் அழுக்கேறிவிட்டு அதனால் உஷ்ணம் அதிகப்பட்டதாலும், நமது சைனியங்கள் மிகவும் உஷ்ணத்தால் கஷ்டப்பட்டனர். தையல் வேலை செய்யும் கோஷ்டியினரால் தயாரிக்கப்பட்டு கடை விலையிலும் குறைந்த விலையில் நாம் வேண்டிய சட்டைகளும், கால்சட்டைகளும் துருப்புகளுக்குக் கொடுத்து உதவினோம். இவைகள் தேவைக்குத் தகுந்தாற்போன்ற அளவு நமக்கு கிடைப்பதில்லை. உடைகள் தயாரிப்பவனிடமிருந்து நேராக அணிந்துகொள்பவன் வசம் சேர்ந்து விடுகின்றது. உடைகள் செய்ய முடியாதவர்கள் கைக்குட்டைகளையாவது செய்யலாம். காக்கி, அல்லது வெள்ளைக் கைக்குட்டைகளின் தேவை என்றைக்கும் குறையாது. அவைகளின் விலையும் கடைகளில் அதிகமானதாயிருக்கின்றன.

பின்னல் வேலை செய்பவர்களும், இப்பொழுது அதிகமாய்த் தேவையாயிருக்கின்றனர். அகில இந்திய மேஜோடு நிலயத்திற்கு ஏராளமான வெள்ளை மேஜோடுகள் தேவை என்று உத்தரவு வந்திருக்கிறது. தென் இந்தியாவிலுள்ள துருப்புகளுக்கெல்லாம் மேஜோடுகள் தேவையாயிருக்கின்றன. அதிகமாக நடையில்லாத பிரதேசங்களில் உள்ளவர்களும்

நாம் பஞ்சினலான மேஜோடுகள் கொடுத்து வருகிறோம். கடல் தாண்டி யுத்தம் செய்வோர்கள் தவிக்காமல் இருக்குமாறு பார்த்துக் கொள்வதும் நம் பொறுப்புதான்.

துரதிர்ஷ்டவசமாய் அதைரியப்படுத்தும் கதைகள் இன்னும் உலவுகின்றன. சிற்சில சமயங்களில்தான் பொதுஜன வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் இக்கதைகளைப் புறக்கணிப்பதற்காக உண்மை என்னவென்று வினவுகிறார்கள். கம்பளி சாமானகள் எல்லாம் கிட்டங்கிகளில் வைத்துப் பூட்டப்படுகின்றன என்று ஒரு பழைய கதை விளங்குகிறது. வெய்யில் காலங்களில் அவைகள் அவ்வாறு செய்யப்படுகின்றன. அப்பொழுது அவைகள் யாருக்கும் தேவையில்லாதவையாகின்றன. வெய்யில் காலங்களில் தேவையில்லாததினால் அவைகளை உற்பத்தி செய்வதை நிறுத்தி வைப்பதும் இல்லை. அடுத்த குளிர்காலத்தில் உண்டாகும் தேவைக்கு வேண்டிய அளவு தயார்செய்து வைத்துக்கொள்ள இதுவே தருணம். ஆக்ஷேபனை செய்பவர்கள், இந்தக் கம்பளி சாமான்கள் எல்லாம் இந்தியாவிலேயே வைக்கப்படுகின்றன என்று கத்துகின்றனர். ஆம், அப்படியேதான் வைக்கப்படுகின்றன. இப்பொழுது டூனிஸிலே, ஜெனரல் அலெக்ஸாண்டருக்கு இவைகள் தேவையேயில்லை. அடுத்த குளிர்காலத்தில் யுத்தம் வேறு எங்காவது நடக்கும். அவ்விதம் நாம் நம்புகிறோம். முக்கியமாய் செய்ய வேண்டியதாவது, எல்லாக் கம்பளி சாமான்களையும் சேகரித்து வைத்திருந்து, அடுத்த குளிர்காலத்தில் எங்கே யுத்தம் நடக்கிறதோ, அங்கு தேவையாயிருக்கும்போது நேராக அங்கேயே அனுப்புவதாகும்.

பெனிலோப் கதை இன்னும் மறக்கப்படவில்லை. தலைமை காரியாலயத்தில், பின்னலினால் தயாரித்துவந்த துணிகளெல்லாம் பிரிக்கப்பட்டு மீளவும் பின்னப்படுகின்றன என்றதோடு ஆதாரமில்லாத கதைகள் கிளப்பப்பட்டு அவைகளுக்கு சில இடையூறுகளும் செய்கின்றன. எல்லாக் கதைகளையும்போல, இக்கதையிலும் ஒரு சிறிதளவு உண்மையிருக்கிறது. அனுபவமில்லாமல் ஆர்வத்தினால் மட்டும் செய்யப்பட்ட, முதிர்ந்த யானைக்காலுடையோருக்குச் சேரும்படியான மேஜோடுகளும், 6 வயது குழந்தைக்குச் சரியான அங்கிகளும் சில சமயங்களில் பிரிக்கப்படுகின்றன. கம்பளியும் கப்பல் வசதிகளும் மிகவும் முக்கியமானவை. இத்தகைய சாமான்களை அனுப்பி, அதனைப் பெற்றுக் கொள்பவர்கள் தங்கள் லாரிகளைத் துடைக்க உபயோகப்படுத்தப்படும் சாமான்களாகையினால், இந்தக் கம்பளிகளையும் கப்பல் வசதிகளையும் வீணாக்குவதில் பயனில்லை. ஆகையால் அவைகள் மறுபடியும் செய்யப்பட வேண்டும். ஆனால் பின்னியவர்கள் தங்கள் சாமான்களை மறுபடி பின்ன விரும்புவதில்லை. இந்த ருசியில்லாத வேலையை அவசியமில்லாத சமயங்களில் செய்யப்படுவதுமில்லை. எனவே இம்மாதிரியாய் சொல்லப்படுபவையெல்லாம் ஒரு கட்டுக்கதையேயாகும்.

தையல் வேலை செய்யும் கோஷ்டியினர் மிகுந்த முக்கியமான பெரும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களைத் தடுக்க விரும்புகிறவர்களை, யுத்த வேலையைத் தடுக்கவும், அதைரியப்படுத்தவும் செய்பவர்களைத் தண்டிப்பதுபோல் தண்டிக்க வேண்டியதுதான்.

---

## லாடங்களும் மோட்டார் டயர்களும்.

லாடங்களினால் முன்னிருந்ததைவிட இப்பொழுது மோட்டார் டயர்கள் அதிகமாக பொத்துப்போய் விடுகின்றன அல்லது வெட்டப்படுகின்றன. பெட்ரோல், மோட்டார் டயர் பங்கீடு வந்தபிறகு கட்டை வண்டிகள் போக்குவரத்து அதிகரித்துவிட்டது. யுத்தத்துக்கு முன்னாலிருந்ததைவிட ரஸ்தாக்களில் ஏராளமான பழைய லாடங்கள் சிதறிக்கிடக்கின்றன. லாடம் அடித்த மோட்டார் உபயோகப்படுகிறதில்லை. அதைப் பூராவும் பழுதுபார்ப்பதென்பது சாத்தியமில்லை. டயர்களின் குறைவு ஏற்பட்டுவிட்டதால் ரஸ்தாக்களில் லாடங்களில்லாமல் செய்வது அவசியமாகும். ராணுவ வண்டிகளும், சொந்த வண்டிகளும், பொதுஜன மோட்டார்களும் எல்லாம் பழுதுபடுகின்றன.

ரஸ்தாக்களிலிருந்து முழுசான ஆறு லாடங்களை எடுத்துக் கொடுப்பவருக்கு ஒரு அணா கொடுப்பதென்று அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.

---

## கைத்துப்பாக்கி சிப்பாய், சோர்வடைந்து, தோழர்களுக்குப் பளுவாக இருக்கக்கூடாதென்று நினைத்து காட்டிற்குள் சென்றான்.

அரக்கானில் மாயூ தீபகற்பத்தில் ஜப்பானியர்கள் மிகுந்த மலைப்பிராந்தியங்களின் வழியாக நமது படை வரிசைக்கு பிரிடிஷ், இந்தியத் துருப்புகளின் ஒரு கோஷ்டி வந்து

கொண்டிருந்தது. முதல் இன்னிஸ்கில்லிங் கைத்துப்பாக்கிப்படையைச் சேர்ந்த னேர் என்பர், வறுமையால் கஷ்டப்பட்டு நாளுக்கு நாள் பலஹீனமடைந்தான். தோழர்களுக்குத் தான் ஒரு பளுவாக ஆகிவிடுவோமென்றும் பயந்தான்.

தைரியமாகப் பத்துநாட்கள் முன்னேறிய பிறகு, பாதுகாப்பு ஸ்தலத்துக்கு இரண்டுநாள் பயணமிருக்கும்பொழுது, மற்றவர்களைத் தொந்தரவு செய்யாமல் தான் செல்லமுடியாதென்று னேருக்குப் புலப்பட்டது.

அவர்களிடம் இதை அவன் வெளியிடவில்லை. அவர்கள் அவனை உத்சாகப்படுத்திய பொழுது சிறித்துக்கொண்டே "நான் இதை சகித்துக்கொள்ளுவேன்" என்று னேர் சொன்னான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் ஒருவருமறியாமல் காட்டிற்குள் சென்றுவிட்டான். வெகுநேரம் வரையில் அவன் திரும்பிவராதது கண்டு அவனைத்தேட ஆரம்பித்தார்கள். கடைசிவரையில் அவனைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. இந்தத் தீரர் தன் உயிரை மாய்த்துக் கொண்டாவது மற்றவர்களுடைய உயிரைக் காப்பாற்றவேண்டுமென்று தீர்மானித்துவிட்டார்.

இந்த விருத்தாந்தத்தை இந்தக் கோஷ்டியிலுள்ள ஒரு ஆங்கிலேயர் என்னிடம் சொன்னார். இந்தக் கோஷ்டியும் இன்னும் 11 இந்தியப்படை பகுதிகளும் பிரிடிஷ் முகாமுக்குத் திரும்பிவந்த மறுநாள் இது வெளிவந்தது.

---

## ஒரு வாரம் வரையில் உணவு இல்லை.

அவர்களுக்கு ஒரு வாரமாக ஆகாரம் கிடையாது. கால்களில் காயம் ஏற்பட்டிருந்தது. அவர்கள் முற்றிலும் சோர்வடைந்துவிட்டார்கள். ஆனாலும் மறிக்கவில்லை. அவர்களுடைய ஊக்கம் குறைவுபடவில்லை.

ஜப்பானியர்கள் கபடமாக முன்னேறிய பொழுது மாயூமலைகளுக்குக் கிழக்கே உள்ள பிரிடிஷ், இந்தியத் துருப்புகள் மலைகளைத்தாண்டி, மேற்குப்பக்கத்திலுள்ள மூலசேனையுடன் சேர்ந்துகொள்ளுவதற்காக, எதிரியை ஏமாற்றுவதற்காக சிறிய கோஷ்டிகளாகப் பிரிந்தன. பூஸிலியர், னேர் சென்ற கோஷ்டியில் முதலில் 8 பேர்களிருந்தார்கள். பிறகு அது 14 ஆக மாறிற்று. நாளுக்குநாள் அவர்களுக்கு நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டபோதிலும் ஒருவரைத்தவிர மற்றெல்லோரும் லக்ஷியத்தை அடைந்தார்கள்.

### மர்ரி மாகாணத்திலிருந்து வந்த சுபேதாருக்குப் புகழுரை.

மர்ரி மாகாணத்திலிருந்து வந்த மலைப்பிராந்திய வாசியான சுபேதார் முகம்மது யூஸப் பின்வாங்கும் படைகளுக்கு ஒத்தாசை செய்தான். அவர்களுக்குப் பத்திரமானவும் சிலாக்யமானதுமான மார்க்கங்களை அவன் காட்டினான். "அவனுடைய உதவியில்லாமல் நாங்கள் பின்வாங்கியிருக்கமுடியாது. அவன் அதிக நெஞ்சு உரப்பு உள்ளவன் என்று இந்தக் கோஷ்டியின் தலைவரான பிரிடிஷாரில் ஒருவர் சொன்னார். எல்லாருடைய சார்பாகவும் இந்தப் புகழுரை சொல்லப்பட்டது. பிரயாணம் துவங்கியபொழுது அவர்கள் சில உணவுப் பொருள்களைச் சேகரித்துக்கொண்டார்கள். முக்கியமாக அவர்களிடம் 2 டப்பி பொட்டிப் பாலும், மாட்டு இரைச்சியில் இரண்டு டப்பிகளும், 4 பவுண்டுகள் ரொட்டியும், 1 பவுண்டு தேயிலையும் தானிருந்தன.

ஒவ்வொருவரும் காலையிலும் சாயங்காலத்திலும் மாட்டு இரைச்சியில் ஒரு கபளம் சாப்பிட்ட போதிலும் பிரயாணத்தின் முடிவுக்கு ஒரு வாரத்துக்கு முன்னதாகவே உணவுப் பொருள்கள் அற்றுப்போய்விட்டன. அதற்குப்பின் ஒரு நாளைக்கு 12-மணி நேரம் நடந்தார்கள். பாலில்லாமலும், சர்க்கரையில்லாமலும் அரைக்கோப்பை தேத்தண்ணீரை மட்டும் புறப்படும் முன்னும், இரவில் சிரமப்பரிகாரம் செய்யுமுன்னும் குடித்து இரவில் சற்றுத் தூங்குவார்கள். ஜப்பானியர்களிடமிருந்தும் கொசுக்களிடமிருந்தும் பயமிருந்துகொண்டேயிருந்தது.

ஐந்து தடவை கோஷ்டியார் மலைப்பிரதேசங்களிலிருந்து கடற்கரைச் சமவெளிகளுக்குச் சென்றபொழுது அங்கேயும் ஜப்பானியர்களிருப்பதைக் கண்டார்கள். கடைசியில் அவர்கள் மாங்டாவுக்குப் போகும் ரஸ்தாவை அடைந்தார்கள். அதன்வழியே சென்றார்கள். பிரிடிஷ் முகாமுக்குச் சென்று தங்களுடைய பிரயாணத்தை முடித்துக்கொண்டார்கள்.

# நெய்ரோபியிலுள்ள வாலிபப் பருவமுள்ள குமாஸ்தா இந்திய விமானப் படையைப்பற்றி வாசித்துவிட்டு, அதில் சேரவேண்டுமென்று பம்பாய்க்கு மனுப்போடுகிறான்.

நெய்ரோபியிலுள்ள வாலிபப்பருவமுள்ள ஒரு ரயில்வே குமாஸ்தா ஒரு பத்திரிகையைப் பிரித்துப் பார்த்து, பர்மாவில் இந்திய விமானப்படை செய்த தீரச்செய்கைகளைப்பற்றிய விருத்தாந்தத்தைப் படித்தான். கட்டுரையில் அநேக படங்களும் போடப்பட்டிருந்தன. தன்னைப்போன்ற புத்தி கூர்மையுள்ள, வீரம் பொருந்திய அநேக வாலிபர்கள் விமானிகளாகவும், அப்ஸர்வர்களாகவும், இயந்திர வேலைக்காரர்களாகவும் பயிற்சிபெற ஆசைப்படுவதைக் கண்டு அவனுக்கு ஒரு அவா உண்டாகிற்று.

இந்தியாவின் விமானப்படையில் சேருவது பெருமைதான். இந்தியாவின் விமானப்படை விருத்தியடையும்பொழுது நாமும் ஏன் முன்னேற்றமடையக்கூடாது. ஏன் நாம் அதில் சேரக்கூடாதென்று நினைத்தான்.

உடன் காலத்திலேயே அந்தக் குமாஸ்தா பம்பாயிலுள்ள அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினான்.

"எனக்கு 18 வயது. நான் முஸ்லீம். திடசரீரமுள்ளவன். நல்லபார்வையுள்ளவன். எல்லாவிதமான விளையாட்டுகளிலும் நிபுணன். விமானப்படையில் சேர்ந்து சேவைசெய்ய எனக்கு ஆவலதிகம்" என்று எழுதினான்.

பம்பாயிலுள்ள டெக்னிகல் ரெக்ரூடிங் ஆபீஸரிடமிருந்து நெய்ரோபியிலுள்ள குமாஸ்தாவுக்கு ஒரு கடிதம் அனுப்பப்படுகிறது. இந்திய விமானப்படையில் சேரவேண்டுமென்று எழுதியிருப்பதை மெச்சுகிறோம் என்று அதில் எழுதப்பட்டிருக்கிறது. பம்பாய்க்கு வந்து டெக்னிகல் பயிற்சிசாலையில் சேர்ந்துகொள்ளும்படியாக அவனுக்கு உத்தரவு வந்துவிட்டது.

இந்த நெயிரோபியைப்போன்ற இந்திய வாலிபர்களில் அநேகர் இம்மாதிரி முன்வர வேண்டும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 148. (2-வது பிரிவு.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 29- 5-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 2- 6-43 | மிரட்டுநிலை | ... மாலை | 7.00 |
| 30- 5-43 | கீரனூர் | ... ,, | 7.00 | ,, | அரிமளம் | ... ,, | 7.30 |
| ,, | நாஞ்சூர் | ... ,, | 7.30 | 3- 6-43 | பூங்குடி | ... ,, | 7.00 |
| 31- 5-43 | பூவரசகுடி | ... ,, | 7.00 | ,, | சத்தியமங்கலம் | ... ,, | 7.30 |
| ,, | வேங்கடகுளம் | ... ,, | 7.30 | 4- 6-43 | உடையாளிப்பட்டி | ... ,, | 7.00 |
| 1- 6-43 | பெருங்களூர் | ... ,, | 7.00 | ,, | கிள்ளுகோட்டை | ... ,, | 7.30 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, | 7.30 | | | | |

### பிரஸங்கம் 149. (3-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5- 6-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 9- 6-43 | கொடும்பாளூர் | ... மாலை | 7.00 |
| 6- 6-43 | குடுமியாமலை | ... ,, | 7.00 | ,, | விராலிமலை | ... ,, | 7.30 |
| ,, | பரம்பூர் | ... ,, | 7.30 | 10- 6-43 | களமாவூர் | ... ,, | 7.00 |
| 7- 6-43 | வெங்களூர் | ... ,, | 7.00 | ,, | நல்லூர் | ... ,, | 7.30 |
| ,, | கோனாபட்டு | ... ,, | 7.30 | 11- 6-43 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| 8- 6-43 | நச்சாந்துபட்டி | ... ,, | 7.00 | ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |
| ,, | விராச்சிலை | ... ,, | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 29— 5—43 | பொன்னமராவதி. | 5— 6—43 | திருமயம். |
| 30— 5—43 | ஏம்பல். | 6— 6—43 | விராச்சிலை. |
| 31— 5—43 | கொன்னையூர். | 7— 6—43 | கீரனூர். |
| 1— 6—43 | ராமச்சந்திரபுரம். | 8— 6—43 | குடுமியாமலை. |
| 2— 6—43 | கீழாநிலை புதுப்பட்டி. | 9— 6—43 | கரம்பக்குடி. |
| 3— 6—43 | ஆலங்குடி. | 10— 6—43 | கீழாநிலை. |
| | | 11— 6—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—2-6-43.